384

THE "VAKIL"—TAMIL LAW MAGAZINE—FOR THE CITIZEN

"வக்கீல்"

MAY 952
MADRAS

384
2/5/52

பொது மக்களுக்குத் தேவையான
புதிய சட்டங்களையும் கண்ட்ரோல் முதலிய
விதிகளையும் உடனுக்குடன்
விமர்சனங்களுடன்
விளக்கும்

இந்த இதழில்

ஜார்ஜ் மன்னர்

வியாபாரத்தைத் தடுத்த
மத்திய சர்க்கார்
உத்தரவு செல்லாமல் போயிற்று

கமிஷன் ஏஜண்டுகளுக்கும்
புரோகர்களுக்கும்
விற்பனை வரி உண்டா

கிரயம் என்று எழுதப்பட்ட
அடமானம்

அடகு நகைகள்
திருட்டுப் போனால்

கிராம பஞ்சாயத்துச் சட்டம்

அறநிலையப் பாதுகாப்பு
சட்ட விதிகள்

கேள்வி—பதில்

தமிழ் சட்டப் பத்திரிகை

(மாத வெளியீடு)

THE "VAKIL" — மார்ச்சு-1952 — 6 அணா

V. S. & Sons

SWEETS

குணத்திலும்
மணத்திலும்
நிகரற்றது

வி. எஸ். & ஸன்ஸ்
பெப்பர்மெண்டுகள்

தயாரிப்பவர்கள்:

தென் இந்திய பெப்பர்மெண்டு தொழிற்சாலை
கும்பகோணம்

(Estd. 1925)

"வக்கீல்"

பொதுமக்களுக்கான உயர்தர மாத சட்ட வெளியீடு

ஆசிரியர் கமிட்டி

ஸ்ரீ T. சம்பத், B. A., B. L.,
,, G. நாகராஜ பத்தர், B. A., B. L.,
,, V. தியாகராஜன், B. A., B. L.,
,, A. பார்த்தசாரதி நாயுடு, B. A., B. L.,
,, S. சாம்பசிவய்யர், B. A., B. L.
,, T. S. வெங்கடராமன், B. A., B. L.,
,, R. கிருஷ்ணமாச்சாரி, B. A., B. L.
,, R. கோபாலசாமி, B. A., B. L.,
,, C. R. வீரராகவன், M. A, B. L,
,, R. கிருஷ்ணமூர்த்தி, B. A., B. L.,
,, P. சுந்தரேசய்யர், B. A., B. L.,
,, V. S. விஜயராகவாச்சாரி, B. A., B. L., (ஆசிரியர்)

1952 ஜனவரி முதல் "வக்கீல்" சந்தா விபரம்.

புதிப் சந்தா விபரம்:— தனிப் பிரதி அணா 6. வருட சந்தா ரூ. 5. விசேஷ வருட சந்தா ரூ. 9. ஷை வெளிநாடு ரூ. 10. ஆயுள் சந்தா ரூ. 100.

சந்தாதாரர்கள் கவனிக்கவும்:— 1952 ஜனவரி முதல் "வக்கீல்" அதிகப் பக்கங்களுடனும், பல முக்கியமான பகுதிகளுடனும், வெளிவரும். அதன் பொருட்டு "வக்கீல்" சந்தா மேலே கண்டபடி திருத்தி அமைக்கப்பட்டிருக்கிறது. 1952 ஜனவரி இதழ் முதல் புதிய சந்தா விகிதப்படி கணக்கு செய்து "வக்கீல்" இதழ்கள் அனுப்பப்படும். 1951 டிசம்பர் மாதத்தில் சந்தாதாரர்களாகச் சேர்ந்தவர்களுக்கும் புதிய சந்தா விகிதப்படிக்குள்ள சந்தாதான் கணக்கு செய்யப்படும். வருஷ சந்தாதாரர்களுக்கு 12 மாத இதழ்களும், அந்த வருடத்திய பொருள் அட்டவணையும் அனுப்பப்படும். விசேஷ வருட சந்தாதாரர்களுக்கு மேற்கண்டவை அனுப்புவதுடன் அவ்வருடத்திற்குள் "வக்கீல்" சப்ளிமெண்டுகளாக பிரசுரமாகும் 3 சட்ட புத்தகங்களும் அனுப்பப்படும். ஆயுள் சந்தாதாரர்கள் இனி சந்தா கட்டவேண்டியதில்லை. அவர்களுக்கு மேற்கண்டவை எல்லாம் அனுப்பப்பட்டுவரும்.

சந்தாத் தொகையை மணியார்டர் மூலம் அனுப்ப:—

மானேஜர், "வக்கீல்" காரியாலயம்
தபால் பெட்டி 26 : : கும்பகோணம்
(தென் இந்தியா)
என்ற விலாசத்துக்கு அனுப்பவும்.

"வக்கீல்"

பொது மக்களுக்கான சட்ட விஷயங்களை விளக்கும் மாதப் பத்திரிகை

மலர் 4 மார்ச்சு 1952 இதழ் 3

பொருள் அடக்கம்

	பக்கம்
குறிப்புகளும் - செய்திகளும்	
ஜார்ஜ் மன்னர்	3
மார்ச்சு 26 ஆம் தேதி வருகிறது	4
மத்திய அவசரச் சட்டம்	
எவருடைய ஸ்தாவர சொத்துக்களையும் தாற்காலிகமாகவோ சாசுவதமாகவோ சர்க்கார் உபயோகத்திற்காக எடுத்துக் கொள்ள மத்திய அவசரச் சட்டம்	5
விதிகள்	6
கண்ட்ரோல் லைசென்ஸ் முதலியவை	10
தொழிலாளர் பகுதி	13
சென்னை அறநிலையப் பாதுகாப்புச் சட்ட விதிகள்	14
வழக்கும் - தீர்ப்பும்	17
* வியாபாரத்தைத் தடுத்த மத்திய சர்க்கார் உத்தரவு செல்லாமல் போயிற்று	
* விற்பனை வரிச் சட்டத்தைப் பற்றிய ஒரு முக்கிய தீர்ப்பு. கமிஷன் ஏஜண்டுகளும் தரகர்களும் வியாபாரிகளா?	18
* கிரயம் என்று எழுதப்பட்டாலும் அடமானமே	19
* அடகு நகைகள் திருட்டுப் போயின்	21
கேள்வியும் - பதிலும்	23
சென்னை கிராம பஞ்சாயத்துச் சட்டம்	27

மணியார்டர் கூப்பனில் புரியும்படி ஒவ்வொரு எழுத்தாக—பெயர்; விலாசம்; தபாலாபீஸ்; ஜில்லா—இவைகளை எழுதவும்.

உஷா தையல் மெஷின்கள், ஷோரூம்.

உஷா

தையல் மிஷின்கள்

உறுதியுள்ளவை

சுதேசி

விலை மலிவு.

தொழிலாளிகளுக்கான கால் மெஷின் விலை ரூ. 280/-

குடும்பங்களுக்கான கை மெஷின் விலை ரூ. 230/-

மற்றவிபரங்களுக்கு:—

தஞ்சை ஜில்லா பூர்ண விற்பனை ஏஜண்டு

ஸ்ரீராம் ஏஜன்ஸீஸ்,

32, பெரிய தெரு, :: கும்பகோணம்.

குறிப்பு:—1. எங்கள் தேர்ச்சிபெற்ற மெகானிக்கைக் கொண்டு எல்லாவித தையல் மிஷின்களுக்கும் குறித்த காலத்தில் ரிப்பேர் செய்து கொடுக்கப்படும்.

2. எங்களிடம் உஷா சீலிங், டேபிள் விசிரிகளும் கிடைக்கும்.

கல்யாண

பட்டுநூல்

ஜவுளிகளுக்கு

★

ராதா ஸில்க் எம்போரியம்

★

119, பெரிய தெரு, கும்பகோணம்.

சூரியன் சோப்

S **41**

துணிகளை தூய்மைப் படுத்தி நீண்ட கால உழைப்பைத் தருகிறது. பார்களாகவும் கேக்கு தினுசுகளாகவும் எல்லா வியாபாரிகளிடமும் சுலபமாக கிடைக்கும் உயர்ந்த ரக சோப்பு.

தயாரிப்பாளர்கள்:—

குமரன் சோப் ஒர்க்ஸ்,

Post Box, 44., ஈரோடு.

கிளைகள்:- கோயமுத்தூர், கரூர், திருச்சி

தமிழ்நாடு ... சங்
182746
சென்னை-600 008

வக்கீல்

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!

மலர் 4 மார்ச்சு 1952 இதழ் 3

குறிப்புகளும் - செய்திகளும்

ஜார்ஜ் மன்னர்.

இந்தியா 1950-இல்தான் குடி அரசாக மாறியது. அதற்கு முன் சுமார் 150 வருடங்களுக்கு மேலாக, எங்கிருந்தோ மேற்கே ஆறாயிரம் மைல்களுக்கப்பாலிருந்து நம்மிடம் வியாபாரம் செய்ய வந்த பிரிட்டிஷார் கொஞ்சம் கொஞ்சமாக இந்நாட்டில் வேரூன்றினர். இந்நாட்டைத் தங்களுடையதாக்கிக் கொண்டனர். அதனால் நமக்கு ஒரு நன்மையே தான் விளைந்தது. எனென்றால், சுக்கு நூறாகச் சிதைந்து கிடந்த இந்நாட்டைப் பிரிட்டிஷார்தான் ஒரு பெரிய சாம்ராஜ்யமாக ஸ்தாபித்தனர். இமயம் முதல் குமரிமுனை வரையில், அரபிக்கடல் முதல் பிரும்மபுத்திரா வரை பரவிநிற்கும் இந்நாடு ஓர் ஆட்சிக்குள், ஒரு கொடியின் கீழ், ஒரு குடைக்குள் வந்தது. இந்தியா ஒரு மாபெரும் சாம்ராஜ்யமாக மாறியது. மன்னர்களுக்கும் மன்னராக, சாம்ராஜ்ய சக்கரவர்த்தியாக, பிரிட்டிஷ் அரசரே விளங்கினார். இதை ஸ்தாபித்தது பிரிட்டிஷார்தான். ஆட்சேபனை இல்லை. இதுதான் இப்பொழுது நம்முடைய இந்தியக் குடியரசு.

*

எவ்வளவு தைரியத்துடன் ஆங்கிலேயர்கள் இந்நாட்டைப் பிடித்துக் கொண்டார்களோ, எவ்வளவு கம்பீரத்துடனும் புத்திக் கூர்மையுடனும் அவர்கள் இந்நாட்டை ஒன்றரை நூற்றாண்டுகள் ஆண்டு வந்தனரோ, அவ்வளவு பெருந்தன்மையுடன் அவர்கள் இந்நாட்டை நம்மிடம் ஒரு நொடிப் பொழுதில் ஒப்படைத்து விட்டனர். கணக்குப் பார்க்கவில்லை. கண் கலங்கவில்லை. வெள்ளையர்களில் பல இனத்தனர் இருந்தாலும் பிரிட்டிஷ் இனத்திற்கே இக்குணங்கள் உரியன. சென்ற யுத்தத்தில் மூன்றே நாட்களில் ஜெர்மனியாரால் ஜெயிக்கப்பட்ட பிரஞ்சுக்காரர்கள் இந்நாட்டில் புதுச்சேரி, காரைக்கால் போன்ற சின்ன இடங்களைக் குரங்குப் பிடியாகப் பிடித்துக் கொண்டிருப்பதை நாம் பார்க்கிறோம். சொல்லிக் கொள்ளவும் வெட்கமான முறையில், 'போர்ச்சுகீஸ்' என்ற ஒரு சுண்டைக்காய் வெள்ளையர்கள் 'கோவா' என்னும் ஒரு சிறிய இந்திய நகரத்தை நம்மிடம் விட மறுக்கிறார்கள். அவர்களுக்கும் பிரிட்டிஷாருக்கும் எவ்வளவு வித்தியாசம்!

*

இந்தியா ஒரு சுதந்தர நாடான பின், பிரிட்டிஷார் செய்த சிற்சில குற்றங்களை, இரண்டொரு செய்கைகளை, நாம் எப்பொழுதோ மறந்து விட்டோம். அவை என்ன என்று கூட ஞாபகமில்லை. ஆனால் பிரிட்டிஷாரையோ அவர்களுக்குச் சின்னமாக விளங்கும் அவர்களுடைய மன்னரையோ, நாம் மறக்க முடியாது. சென்ற மாதம் விண்ணுலகை அடைந்த ஆறாம் ஜார்ஜ் மன்னர், 1950 வரை, நமக்கும் மன்னராகத்தான் இருந்தார். ஆங்கில மக்களின் பிரதிநிதியாக இருந்து அவர் இந்

நாட்டை நம்மிடம் ஒப்படைத்த சம்பவத்திற்குச் சரித்திரத்திலேயே வேறு ஈடு உண்டோ!

*

காலஞ் சென்ற ஜார்ஜ் நமது மன்னரல்ல; ஆனால் நம்முடன் நட்புக் கொண்ட ஒரு பெரிய நாட்டின் மன்னர். அம்மன்னர் நமது சக்ரவர்த்தி அல்ல; ஆனால் பிரிட்டிஷாருக்கும் நமக்கும் உள்ள நட்புக்கு ஒரு சின்னம். அம்மன்னரின் பிரிவினால் இந்தியா உண்மையான வருத்தத்தை அடைந்திருப்பதில் ஆச்சரியமில்லை. ஜார்ஜ் மன்னருக்குப் பிள்ளை இல்லை. அதனாலென்ன? சகல அரச குணங்களும் ஒருங்கே வாய்ந்த அவருடைய பெண், எலிஸபெத் இளவரசியேதான் பட்டத்திற்கு வந்திருக்கிறார். வாழ்க ராணி எலிஸபெத்! வாழ்க இந்திய பிரிட்டிஷ் நட்பு!

*

மார்ச்சு 26 ஆம்தேதி வருகிறது! ஜாக்கிரதை!

மார்ச்சு 26-ஆம் தேதி ஒன்றும் விசேஷமில்லை. அன்று தெலுங்குப் புது வருடம் பிறக்கிறது. அன்று எப்பொழுதும் போல் சர்க்கார் விடுமுறைநாள். தமிழ் நாட்டில் வசிக்கும் நமக்கும் அன்று விடுமுறை உண்டு. இதில் ஜாக்கிரதையாக இருக்க வேண்டிய விஷயம் என்ன? இவ்வருடம் நாம் உஷாராகத்தான் இருக்க வேண்டும். ஏனென்றால் வரப் போகும் தெலுங்குப் புது வருட தினத்தன்றாவது நமது இந்திய சர்க்காரால் 'ஆந்திர மாகாணம்' ஒன்று ஸ்தாபிக்கப் படாவிட்டால் ஆந்திரர்கள் பலாத்காரத்தில் இறங்கி விடுவார்களாம்! இவ்விதம் சாமியார் என்று தம்மை கூப்பிட்டுக் கொள்ளும் ஒரு ஆந்திர.... ஆத்மா டில்லி சென்று நமது பிரதமர் நேருவை பயமுறுத்தி இருக்கிறார்! யார் மீது இந்த பலாத்காரத்தை ஆந்திரர்கள் உபயோகிக்கப் போகின்றனர் என்று தெரியவில்லை. இந்திய சர்க்கார் மீதா, தமிழ் நாட்டின் மீதா, அல்லது சென்னைமா நகரத்தின் மீதா என்று ஒன்றும் புரியவில்லை. ஆனால் அச்சமயத்தில் ஆவக்காய் ஊருகாய் போடுவதிலேயே தங்கள் முழு கவனத்தையும் செலுத்திக் கொண்டிருக்க வேண்டிய ஆந்திரர்கள் அதை வேறு வகையில் வீணாக்க மாட்டார்கள் என்பது திண்ணம். தமிழ் நாடே! பயப்பட வேண்டாம்!

*

ஆனால், ஆந்திரரே! யாரய்யா உங்களுக்கு தனி மாகாணம் கிடையாதென்று சொன்னது? உங்கள் ஜில்லாக்களை நீங்கள் ஒரு தனி ராஜ்யமாக அமைத்துக்கொள்வதைத் தமிழ்நாட்டினர் ஆட்சேபிக்கவில்லை; சென்னை சர்க்காரும் ஆட்சேபிக்கவில்லை. இந்திய சர்க்காரும் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் எங்கள் சென்னைமாநகரம் உங்களுக்கு வேண்டுமென்று ஏன் துராசைப் படுகின்றீர்கள்? அது ஒன்றினால்தானே இப்பொழுது நீங்கள் ஆந்திர மாகாணத்தை அமைப்பது தடைப்பட்டு நிற்கின்றது. இன்னும் ஆயிரம் ஆண்டுகள் நீங்கள் தலைகீழாக நின்றாலும் சென்னையில் ஒரு வீடுகூட உங்களுக்குச் சொந்தமாகாது. இதை என்று உணருகின்றீரோ அன்று உங்கள் தனி ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும். வருடப்பிறப்பு வரை கூட நீங்கள் காத்திருக்க வேண்டாம்.

*

ஆந்திர ஜில்லாக்களைத் தமிழ் நாட்டிலிருந்து பிரிப்பதில் எங்களுக்குத்தான் லாபம். எங்கள் தஞ்சையில் விளையும் தானியம், எங்கள் தமிழ்நாடு முழுவதற்கும் கண்டு மிஞ்சும். எங்கள் திருநெல்வேலியில் விளையும் பருத்தியும் எங்கள் கோயமுத்தூரில் நெய்யும் ஆடைகளும் எங்களுக்குக் கண்டு மீதமாகும். சகோதர ஆந்திரர்களுக்கே உணவு கொடுக்கத் தயங்கும் உங்கள் கோதாவரி கிருஷ்ணாவைக் காட்டிக் கொடுக்காமல் இருப்பது எங்கள் தஞ்சை அன்றோ! நீங்கள் பிரிந்து போனால், எங்கள் அருமைத் தஞ்சையைக் கசக்கி அரிசிக் கொள்முதல் செய்து யாருக்கோ கொடுக்க விடமாட்டோமே!

எவருடைய ஸ்தாவர சொத்துக்களையும் தாற்காலிகமாகவோ, சாசுவதமாகவோ சர்க்கார் உபயோகத்திற்காக எடுத்துக்கொள்ள மத்திய அவசரச் சட்டம் *(1952)*

[1952 ஆம் வருடத்திய 3 ஆவது மத்திய அவசரச் சட்டம். The Requisitioning and Acquisition of Immovable Property Ordinance III of 1952. பார்லிமெண்டு சபை கூடாமலிருக்கும் போது ஜனாதிபதி அவர்களால் 25-1-1952-ல் பிரகடனம் செய்யப்பட்டது. பார்லிமெண்டு சபை கூடிய பின் 6 வாரங்கள் வரை தான் அவசரச் சட்டங்கள் உயிருடன் இருக்கும். அதற்குள்ளேயும் அவசரச் சட்டங்களை ரத்துச் செய்ய பார்லிமெண்டுக்கு அதிகார முண்டு.]

யுத்த காலத்தில் இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின்படி (Defence of India Act 1939) எவருக்குச் சொந்தமான ஸ்தாவர சொத்துக்களையும் சர்க்காரே தேவையான காலத்திற்கு உபயோகித்து வர உத்தரவுகள் பிறப்பிக்கப் பட்டிருந்தன. அச்சட்டம் ரத்தான சமயத்தில் சர்க்கார் வசமுள்ள கட்டடங்கள் அல்லது வேறு வகையான ஸ்தாவர சொத்துக்களைப் பொறுத்த வரையில், அவைகள் சர்க்கார் வசமே நீடித்து வருவதற்காக 1947 இல் ஒரு சட்டம் ஏற்பட்டது. (1947 ஆம் வருடத்திய 17 ஆவது மத்திய சட்டம்.) இச்சட்டம் ரத்துச் செய்யப்பட்டு, இப்பொழுது ஜனாதிபதி அவர்களால் இந்த 'ஆர்டினன்ஸ்' என்ற அவசரச் சட்டம் பிறப்பிக்கப் பட்டிருக்கிறது. இச்சட்டம் காஷ்மீர் தவிர அகில இந்தியாவிலும் அமுலில் இருக்கும்.

இச்சட்டப்படி மத்திய சர்க்காருக்கு, எவ்விதக் கட்டடங்களோ வேறு விதமான ஸ்தாவர சொத்துக்களோ சர்க்கார் உபயோகத்திற்காகத் தேவையாக இருந்தால், இதற்காக அதிகாரம் பெற்ற ஓர் அதிகாரி அக்கட்டடம் அல்லது சொத்தைச் சர்க்கார் வசம் எடுத்துக் கொள்ளப் போவதாக சொத்தின் சொந்தக்காரருக்கோ, சொத்து யாருடைய சுவாதீனத்திலிருக்கிறதோ அவருக்கோ நோட்டீஸ் கொடுத்து, ஏதாவது ஆட்சேபனைகள் உண்டா, என்று கேட்பார். இரண்டு மாதங்களுக்குள் அக்கட்டடம் அல்லது சொத்தில் எவ்வித மாறுதல்களும் செய்யக் கூடாதென்றும், வாடகைக்கு விடக் கூடாதென்றும் அவர் தடையும் செய்யலாம். சொத்தின் சொந்தக்காரர் நோட்டீஸ் கிடைத்த 15 நாட்களுக்குள் ஏதாவது ஆட்சேபனைகள் இருந்தால் அவ்வதிகாரிக்குத் தெரிவிக்கலாம். இந்த ஆட்சேபனைகளைக் கேட்ட பின்பும், அச்சொத்தைச் சர்க்கார் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று அவ்வதிகாரிக்குத் தோன்றினால் அதற்காக உத்தரவு பிறப்பிப்பார். அவ்வுத்தரவு கிடைத்த 10 நாட்களுக்குள் அவ்வதிகாரியிடம் சொத்தை விட்டு விட வேண்டும். அப்படி விட மறுத்தாலும் தவறினாலும் அச்சொத்திலிருப்பவர்களை அவசியமானால் பலாத்காரமாகக் கூட அப்புறப்படுத்த அவ்வதிகாரிக்கு அதிகாரம் உண்டு. கோயில், மடம் போன்ற மதசம்பந்தமான வழிபாடுகளுக்காகவோ, பள்ளிக்கூடங்களுக்காகவோ, ஆஸ்பத்திரி அல்லது திக்கற்ற குழந்தைகளுக்கான விடுதியாகவோ பிரத்தியேகமாக உபயோகப் படுத்தப்படும் இடங்களை மட்டில் இச்சட்டப்படி எடுத்துக் கொள்ளச் சர்க்காருக்கு அதிகாரம் இல்லை. தாங்கள் எடுத்துக்கொண்ட சொத்துக்களை தேவையான விதம் மாறுதல்கள் செய்து உபயோகிக்கச் சர்க்காருக்கு அதிகாரம் உண்டு. இஷ்டப்பட்ட காலத்திலும் அச்சொத்துக்களைத் திரும்பக் கொடுத்து விடவும் உரிமை உண்டு. இவ்விதம் எடுத்துக் கொள்ளப்படும் கட்டடங்கள் அல்லது சொத்துக்களுக்குச் சர்க்காரால் நஷ்ட ஈடு கொடுக்கப்படும். அச்சொத்தை வாடகைக்கு விட்டால் எவ்வளவு தொகை வருமோ, அதுவும், அச்சொத்தைக் காலி செய்யவும் மறுபடியும் திரும்ப எடுத்துக் கொள்ளவும் சொந்தக்காரருக்கு ஏற்பட்ட செலவுகளும் சர்க்கார் எடுத்துக் கொண்டதால் ஏற்பட்ட வேறு நஷ்டங்களும் இவைகள் எல்லாம் சேர்த்துக் கொடுக்கப்படும். இத்தொகையைப் பற்றிச் சர்க்காரும் சொத்தின் சொந்தக்காரரும் ஒத்துக் கொள்ளா விட்டால், ஹைகோர்ட் நீதிபதி அந்தஸ்துள்ள ஒருவர் இதற்காக மத்தியஸ்தராகச் சர்க்காரால் நியமிக்கப்படுவார். அவருடைய தீர்ப்பின் பேரில் 30 நாட்களுக்குள் ஹைகோர்ட்டுக்கும் அப்பீல் உண்டு.

சர்க்காரால் இச்சட்டப்படி தாற்காலிகமாக வைத்துக் கொள்ளப்பட்ட எந்தச் சொத்தையும் அவர்களே விலைக்கும் எடுத்துக் கொள்ள இச்சட்டத்திலேயே அதிகாரம் கொடுக்கப்

பட்டிருக்கிறது. அதாவது அச்சொத்துக்களில் சர்க்கார் செலவில் அதிக வேலைப்பாடுகள் செய்யப்பட்டு, அச்சொத்தைச் சர்க்காரே வைத்துக் கொள்வது நல மென்று தோன்றும் போதும், அல்லது அவைகளை எல்லாம் இடித்து முன் இருந்த நிலைமையிலேயே சொந்தக் காரருக்குச் சொத்தை திரும்பக் கொடுப்பதில் சர்க்காருக்கு நஷ்டம் அதிகமாகும் என்று தோன்றினாலும்; அப்படித்தாமே செய்து கொள்ள நஷ்ட ஈடுவேண்டு மென்று சொத்தின் சொந்தக்காரர் கேட்டாலும் தான் இவ்விதமான சொத்துக்களைச் சர்க்காரே விலைக்கு எடுத்துக் கொள்ள உத்தரவு பிறப்பிப்பார்கள். இதற்கும் நஷ்ட ஈடு கொடுக்கப்படும். இதிலும் தகராறு இருந்தால் முன் சொன்னபடி மத்தியஸ்தருடைய தீர்ப்புக்கே விடப்படும். மத்யஸ்தருடைய தீர்ப்பின் பேரில் முன் விவரித்தபடி ஹைகோர்ட்டுக்கு அப்பீல் உண்டு.

இச்சட்டத்தில் கண்ட விஷயங்களைக் குறித்து வேறு சிவில் கோர்ட்டுகளுக்கு அதிகாரம் கிடையாது. இச்சட்ட ஷரத்துக்களை மீறுவதும், அதிகாரிகளைத் தடுப்பதும் குற்றங்களாகும். ரூபாய் 1000 வரை அபராதம் விதிக்கப் படலாம். இச்சட்டத்தை அனுசரித்து விதிகள் ஏற்படும்.

* * * *

பத்திரிகை அச்சகச் சட்டம். 1-2-1952 முதல் அமுல். சர்க்கார் அறிக்கை:—

1951-ஆம் வருடத்திய பத்திரிகை (ஆட்சேபகர விஷயங்களைக் குறித்த) சட்டம் (The Press Objectionable Matter Act 1951) 1—2—1952 முதல் அமுலுக்கு வருமென்று மத்திய சர்க்காரால் தேதி குறிப்பிடப்பட்டிருக்கிறது. (இச்சட்டம் 1952 ஜனவரி "வக்கீல்" இதழில் விவரமாக விளக்கம் செய்யப்பட்டிருக்கிறது.)

ஆடைகளை அழகு பெறச் செய்வது!

அன்னகிளி

சோப்

தயாரிப்பவர் :-

சவுத் இந்தியன் சோப் ஒர்க்ஸ்,

P. B. No. 38

தஞ்சாவூர்.

விதிகள்

கலப்புத் தடைச் சட்ட விதிகள்—திருத்தம்.

1-4-1952 முதல் அமுலுக்கு வரும்.

சென்னைக் கலப்புத் தடைச் சட்டத்தை அனுசரித்து (Madras Prevention of Adulteration Act 1918.) ஏற்பட்டிருக்கும் விதிகளில், கீழே கண்டபடி சில ஷரத்துக்கள் புதிதாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றன:—(1) விதி 28 (F):—எவரும் நேரிலோ, ஏஜண்டு அல்லது சிப்பந்தி மூலமாகவோ, விற்பனைக்காக வைத்திருக்கும் காப்பிக் கொட்டையிலோ, காப்பித்தூளிலோ, தேயிலையிலோ வேறு எவ்விதமான பண்டங்களையும் கலக்கக்கூடாது. எவரும் காப்பி அல்லது டீயுடன் கலப்பதற்காகவோ, 'டிகாக்ஷனு'டன் கலப்பதற்காகவோ காப்பி அல்லது டீ போன்ற வேறு எவ்விதப் பண்டங்களையும்; அல்லது காப்பி, டீக்குப் பதிலாக அவைகளுடன் கலந்து உபயோகப் படுத்தக்கூடிய பண்டங்களையும் விற்பனை செய்யவும் கூடாது; விற்பனைக்காகத் தம் வசத்திலும் வைத்திருக்கக்கூடாது; மேற்கண்டபடி கலந்து உபயோகித்து விற்பனை செய்வதற்காகவும் வைத்திருக்கக்கூடாது. காப்பி அல்லது டீயுடன் கலந்து உபயோகப்படுத்தி விற்பனை செய்வதற்காகத் தான் அப்பண்டங்களை ஒருவர் தம் வசம் வைத்திருக்கிறார், என்று சந்தேகம் தோன்றும் படியான சந்தர்ப்பங்களிலும் அவைகளை ஒருவர் வைத்துக் கொள்ளக் கூடாது. சிக்கரியைக் காப்பியுடன் சேர்ப்பதும் கூடாது.

விதி 36.—விற்பனைக்காக உணவுப் பதார்த்தங்கள் செய்ய 'சாக்கரி'ன் (Saccharin) போன்ற செயற்கைச் சர்க்கரைகளை ஒருவரும் உபயோகப்படுத்தக் கூடாது. ஆனால் வியாதியஸ்தர்களுக்காக மட்டில் இவ்விதச் செயற்கைச் சர்க்கரை கலந்து உணவுப் பண்டங்கள் செய்யலாம். அப்படிச் செய்யப்படும் உணவுப் பண்டங்களின் பொட்டணங்களில் எவ்விதச் செயற்கைச் சர்க்கரை உபயோகப்படுத்தப் பட்டிருக்கிறதென்று விளம்பரப் படுத்துவதுடன் 'வியாதியஸ்தர்களுக்குப் பிரத்தியேகமாகத் தயார் செய்யப்பட்ட உணவு' என்று லேபிள் ஒட்ட வேண்டும்.

விதி 37.—செயற்கைச் சர்க்கரையை விற்பனை செய்பவர்கள் ஒவ்வொரு பாக்கெட்டிலும் உள்ளேயும் வெளியேயும் இருக்கும் 'லேபிள்'களில் 'இது சர்க்கரின் (அல்லது வேறு வகையான)செயற்கை ரசாயனப் பண்டம். இதில் சத்து ஒன்றுமில்லை. இதை அதிகமாக உபயோகிக்கக்கூடாது' என்று விளம்பரப்படுத்த வேண்டும். அப்படி இருந்தாலொழிய, அதை ஒருவரும் விற்பனை செய்யக்கூடாது.

மேலே கண்ட இரண்டு விதிகளையும் மீறுவது குற்றமாகும். முதல் தடவை செய்யும் குற்றத்திற்கு ரூ. 100 வரை அபராதம் விதிக்கப்படலாம்; மறுமுறை செய்யப்படும் குற்றத்திற்கு ரூ. 500 வரை அபராதம் விதிக்கப்படலாம்.

மேலே கண்ட விதிகள் 1-4-1952 முதல் அமுலுக்கு வரும். உடனடியாக (அதாவது 29-1-1952 முதல்) அமுலுக்கு வரும் வேறு மாறுதல்களும் இவ்விதிகளில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அவை சுருக்கமாக:—

விதி 15.—'ஆட்டுப் பால்' எப்படி இருக்க வேண்டுமென்பது பற்றி.

விதி 26-A.—'காப்பி' என்பது எதைக் குறிக்கும் என்று; விதி 26-B.—'தேன்' என்பது எதைக் குறிக்கும் என்று. இவ்விதிகளில் இருக்கும் வர்ணனைகளுக்கு மாறாக இருப்பது சுத்தமான சரக்கு அல்ல என்று வைத்துக் கொள்ளப்படும். அரூருட் (Arrow Root) எப்படி இருக்கவேண்டு மென்றும் விதிகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

(29-1-1952—சென்னை சர்க்கார் கெஜட்-ரூல் சப்ளிமெண்ட்—பாகம் IA—பக்கம் 63.)

* * *

சென்னை ஜாகை-வாடகைக் கட்டுப்பாடு—சட்ட விதிகள்—நோட்டீசுப்படி கட்டண உயர்வு.

இச்சட்டப்படி எடுக்கப்படும் கடவடிக்கைகளில் கட்டவேண்டிய நோட்டீசுப்படி கட்டணம் உயர்த்தப்பட்டிருக்கிறது. அதாவது மனுதார், எதிர் மனுதார், அல்லது அப்பீல் மனுதார் ஒவ்வொருவருக்கும் அனுப்பவேண்டிய நோட்டீசுக்குப் படி ரூ. 1-7-0. அதே ஊரில் வசிக்கும் அதிகப்படி எண்ணிக்கையுள்ள மனுதார், எதிர் மனுதார், அல்லது அப்பீல் மனுதார் ஒவ்வொருவருக்கும் படி அணா 12 வீதம் கோர்ட் பீஸ் ஸ்டாம்பாகக் கட்டவேண்டும் என்று விதி 19 திருத்தி அமைக்கப்பட்டிருக்கிறது. (முன்பு இருந்தது அணா 8 ம், அணா 4 ம் தான். "வக்கீல்"-1951 ஆகஸ்டு இதழ் பக்கம் 8 பார்க்கவும்.)

(29-1-1952-சென்னைச் சர்க்கார் கெஜட்—ரூல் சப்ளிமெண்டு—பாகம் II—பக்கம் 19.)

* * *

ஜாகை வாடகைக் கட்டுப்பாடு சட்ட விதிகள்—திருத்தம்—பாங்கில் வாடகை கட்டுவது பற்றி.

இச்சட்டப்படி ரிசர்வு பாங்கியிலோ சர்க்கார் கஜானாவிலோ குடிக்கூலிக்காரர் கட்டவேண்டிய வாடகைத் தொகைகளை ஏற்றுக்கொள்ளலாமென்று, ரெண்டு கண்ட்ரோலரோ, அப்பீல் அதிகாரியோ, பணம் கட்டுவதற்கான 'சலானி'ல் எழுதிக்கொடுத்தா லொழிய இத்தொகைகள் ரிசர்வு பாங்கியிலோ, சர்க்கார் கஜானாவிலோ பெற்றுக்கொள்ளப்பட மாட்டாதென்று விதி 6 (2) திருத்தப்பட்டிருக்கிறது.

(5-2-1952-சென்னைச் சர்க்கார் கெஜட்-ரூல் சப்ளிமெண்ட்-பாகம் II—பக்கம் 22.)

* * *

மோட்டார் விதிகள்—திருத்தம் "டிரைவிங் லைசென்சு"க்கு நிபந்தனை.

1940-ஆம் வருடத்திய மோட்டார் விதிகளில் விதி 6A என்று புதிதாக ஒரு ஷரத்துச் சேர்க்கப் பட்டிருக்கிறது. அதாவது:—1-7-1953க்குப் பிறகு, மோட்டார் பஸ், டாக்ஸி, முதலிய பொதுச் சேவை மோட்டார்களை (Public Service Vehicle) ஓட்டுவதற்கான அனுமதி (authorization to drive) வேண்டுமானால், இந்திய செயிண்டு ஜான் ஆம்புலன்ஸ் சங்கத்திலிருந்து (St. John Ambulance Association-India.) மனுதார் ஒரு முதற் சிகிச்சை கற்சாட்சிப் பத்திரம்-அதாவது 'சர்டிபிகேட்' (Adult First Aid Certificate) தாகல் செய்யவேண்டும். இந்தச் சர்ட்டிபிகேட் இல்லாவிட்டால்மேற்கண்ட டிரைவிங் லைசென்சு கொடுக்கப்படமாட்டாது. மேலும் ஏற்கனவே இவ்வித வண்டிகளை ஓட்ட அனுமதி பெற்றவர்களும் 1-7-1953க்குள் மேற்கண்ட சர்ட்டிபிகேட் தாகல் செய்யாவிட்டால், அவர்களுடைய லைசென்சு ரத்துச் செய்யப்படலாம். மேலும்

விதி 160 H என்று ஒரு புதிய ஷரத்துச் சேர்க்கப்பட்டிருக்கிறது. அதாவது:—1-7-1953 முதல் மேற்கண்ட பொதுச்சேவைமோட்டார்கள் விதியில்கண்ட சில முதற் சிகிச்சைச் சாமான்கள் அடங்கிய ஒரு அவசர வைத்தியப் பெட்டியை First Aid Box எப்பொழுதும் மோட்டாரில் வைத்துக் கொள்ள வேண்டுமென்று பர்மிட்டில் ஒரு நிபந்தனை சேர்க்கப்படும்.

கண்டக்டர்களுக்கும் அப்படியே தான். மேற்கண்ட மோட்டார்களுக்கு 1-7-1953க்குப் பின் கண்டக்டர்களாக மனுப் போடுகிறவர்களும் மேற்கண்ட அவசர வைத்திய உதவி சர்ட்டிபிகேட் தாகல் செய்யவேண்டும். பழைய கண்டக்டர்களும் 1-7-1953க்குள் மேற் கண்ட சர்ட்டிபிகேட் தாகல் செய்யாவிட்டால் அவர்களுடைய கண்டக்டர் சர்ட்டிபிகேட் ரத்துச் செய்யப்படலாம்.

விதி 140, 140A இவைகளும் திருத்தி அமைக்கப்பட்டிருக்கின்றன. சென்ட்ரல் போர்டார் தங்களுடைய சில அதிகாரங்களை அவர்களுடைய காரியதரிசிக்கு மாற்றலாம் என்று இருந்தது; இப்பொழுது அவ்வதிகாரங்களைக் காரியதரிசிக்கோ, ஒரு உதவிக்காரிய தரிசிக்கோ மாற்றலாமென்று இந்த ஷரத்துக்கள் திருத்தி அமைக்கப்பட்டிருக்கின்றன.

(22-1-1952—சென்னைச் சர்க்கார் கெஜட் - ரூல் சப்ளிமெண்ட் - பாகம் I—பக்கம் 15.)

நில அபிவிருத்தி விவசாயிகள் கடன் சட்ட விதிகள்—திருத்தம். சவுக்கை மரம் பயிர் செய்ய சர்க்கார் கடன் உதவி.

நில அபிவிருத்திக் கடன் சட்டப்படிக்கும் (Land Improvement Loans Act 1883) விவசாயிகள் கடன் சட்டப்படிக்கும் (Agriculturists Loans Act 1884) சென்னைச் சர்க்காரால் செய்யப்பட்டிருக்கும் விதிகளில் கீழே கண்டபடி ஒரு புதிய ஷரத்துச் சேர்க்கப் பட்டிருக்கிறது. விதி 6 (3):—சவுக்கை பயிர் செய்வதற்காக, சர்க்காரால் கொடுக்கப்படும் கடன் தொகைகளை வட்டியுடன் வருடத்தில் ஒரு பகுதியாக 4க்கு மேற்படாத கெடுக்களில் திருப்பிக் கொடுத்துவிடவேண்டும். சவுக்கைப் பயிர் செய்த, 5-ஆவது வருஷத்தில் கடன் திருப்பிக் கொடுக்கவேண்டிய முதல் கெடு ஆரம்பமாகும். ஒவ்வொரு வருடமும் கொஞ்சம் கொஞ்சமாக வெட்டப்படும் தோப்புக்களில், கடன் அசல் வட்டியுள்பட ஜாடா கடன் தொகையும் சர்க்காருக்குத் திருப்பிக் கொடுக்கப் படுவதற்கு முன்பு, சரிபாதிக்குமேல் வெட்டக் கூடாது. அப்படிச் சரிபாதிக்குமேல் வெட்ட வேண்டுமென்று அபிப்பிராயப் படுபவர்கள் ஜாடா கடன், வட்டிப் பாக்கியையும் ஒரே தடவையாகக் கொடுத்து விட்டு, தாசில்தாரின் எழுத்து மூலமான அனுமதி பெற்ற பின்புதான் வெட்டலாம். இவ்விதி மீறப்பட்டால் உடனடியாக ஜாடா அசல் வட்டித் தொகையும் கடன் வாங்கியவரிடமிருந்து வசூல் செய்யப்படும். இவ்விதிக்கு மாறாகச் சரிபாதிக்குமேல் வெட்டப் படும் தோப்புக்களைப் பற்றிக் கிராம அதிகாரிகள் உடனே தாசில்தாருக்குத் தெரிவித்து, தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்.

(G. O. No. 3322—1-1-1952-சென்னைச் சர்க்கார் கெஜட் - ரூல் சப்ளிமெண்டு - பாகம் I பக்கம் 4.)

[குறிப்பு:—சர்க்காரிடம் இதற்காகக் கடன் வாங்க ரிவின்யூ இன்ஸ்பெக்டர் அந்தஸ்துக்குக் குறையாத எந்த ரிவின்யூ அதிகாரிக்கும் மனுப் போடவேண்டும்.]

சென்னை வியாபார விளைபொருள் மார்க்கெட் சட்ட விதி திருத்தம்.

சில வியாபார விளைபொருள்களை விற்பதையும் வாங்குவதையும் ஒழுங்கு படுத்தும் சென்னை வியாபார விளை பொருள் மார்க்கெட் சட்டத்தின் (The Madras Commercial Crops Markets Act—1933) படி ஏற்படுத்தப்பட்டிருக்கும் விதி 28இல் இப்பொழுது ஒரு திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது. விதி 28 என்பது ஒரு குறிப்பிட்ட வியாபார விளை பொருள் சம்பந்தப் பட்டவரையில், இச்சட்டம் அமுலில் இருக்கும் என்று சர்க்காரால் பிரகடனம் செய்யப்பட்டிருக்கும் பிரதேசங்களில் (Notified Area) அதில் குறிப்பிடப்பட்டிருக்கும் விளை பொருள் வாங்கப்படும் போதும் விற்பனை செய்யப்படும் போதும் ஒரு கட்டணம் கட்டவேண்டுமென்று உத்தரவிட இச்சட்டத்தினால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் 'மார்க்கெட் கமிட்டி'க்கு அதிகாரம் உண்டு. இக்கட்டணம் ஒவ்வொரு வியாபாரப் பொருளுக்கும் எதற்குமேல் இருக்கக்கூடா

தென்று விதி 28 நிர்ணயம் செய்கின்றது. உதாரணமாக 177 பவுண்டு நிறையுள்ள மணிலாக்கடலைப் பருப்பு ஒரு மூட்டை அல்லது அதன் பாகத்திற்கு விதிக்கப்படும் கட்டணம் 18 தம்படிக்கு மேல் இருக்கக் கூடாது. இப்படியே பருத்தி, புகையிலை முதலிய பண்டங்களுக்கும் விதிக்கப் பட்டிருக்கிறது. ஒரே பிரதேசத்தில் இக்கட்டணத்தை ஒரு தடவை கட்டிவிட்ட சரக்குக்கு அதே பிரதேசத்தில் மறுபடியும் இக்கட்டணம் கட்ட வேண்டியதில்லை என்று ஏற்கனவேயே இவ்விதியில் இருக்கின்றது. ஒரு தடவை ஒரு பிரதேசத்தில் கட்டணம் கட்டப்பட்ட அதே சரக்கு இச்சட்டம் அமுலில் இருக்கும் வேறு பிரதேசத்திற்குக் (Notified Area) கொண்டுபோகப் பட்டாலும் மறுபடி அங்கேயும் இக்கட்டணம் கட்ட வேண்டியதில்லை என்று விதி 28 (2) ல் இப்பொழுது ஒரு ஷரத்துச் சேர்க்கப்பட்டிருக்கிறது.

(22-1-1952—சென்னைச் சர்க்கார் கெஜட் - ரூல் சப்ளிமெண்ட்—பாகம் I—பக்கம் 12-G. O. 2464.)

பிழைத் திருத்தம்:— "வக்கீல்" 1952 பிப்ரவரி இதழ் பக்கம் 11ல் "விதிகள்" என்ற பகுதியில் "சிவில் கோர்ட்டுகளில் சம்மன் படி உயர்வு" என்ற தலைப்பின் கீழ் "ரிஜிஸ்டர் தபால் மூலம் அனுப்பப்படும் கட்டளை அல்லது சம்மனுக்கு மேற்கண்ட கட்டணத்தைத் தவிர வேறு அதிகக் கட்டணம் 'சர்சார்ஜ்' இல்லை. மற்றக் கட்டளைகளுக்குச் சர்சார்ஜ் சரிபாதி என்று ஏற்கனவேயே உத்தரவிடப் பட்டிருக்கிறது"—என்று இருப்பதைக் கீழே கண்டபடி திருத்தி வாசிக்கவும். "ரிஜிஸ்டர் தபால் மூலம் அனுப்பப்படும் கட்டளை அல்லது சம்மனுக்கு மேற்கண்ட கட்டணத்தையும், அதற்கான 'சர்சார்ஜை'யும் தவிர, 'பிரயாணப்படி'க்காக வேறு அதிகக் கட்டணம் இல்லை. 'சர்சார்ஜ்' எவ்வளவு என்று ஏற்கனவேயே உத்தரவிடப் பட்டிருக்கிறது.

சென்னை வியாபார விளைபொருள் மார்க்கெட் சட்டம்—குண்டூர் புகையிலை மார்க்கெட்

சென்னை வியாபார விளைபொருள் மார்க்கெட் சட்டத்தின் செக்ஷன் 5 (1) இன்படி மங்களகிரியிலுள்ள குண்டூர் புகையிலை மார்க்கெட் கமிட்டி இருக்கும் இடத்திலிருந்து சுற்று வட்டாரத்தில் உள்ள 5 மைல்கள் வரையில் புகையிலை வாங்கவோ, விற்கவோ 1-1-1952 முதல் எவருக்கும் லைசென்சு கொடுக்கப்பட மாட்டாதென்று சென்னைச் சர்க்கார் உத்தரவிட்டிருக்கின்றனர்.

(G. O. 2445 - 1-1-1952-சென்னைச் சர்க்கார் கெஜட்—பாகம் II—பக்கம் 6.)

ஸ்ரீ மகாலக்ஷ்மி யாத்திரா ஸ்பெஷல்

இமயம் வரை மகத்தான வசந்த கால யாத்திரை

மொத்தம் 50 நாட்கள், காசியில் 9 நாட்கள்.

சென்னையிலிருந்து புறப்படும்

தேதி சித்திரை 19 (1—5—52)

1 வேளை காப்பியும், 2 வேளை பிராமணர்கள் தயாரிக்கும் சிறந்த போஜனமும் உள்பட 3ம் வகுப்பு டிக்கெட்டு ரூ. 325/-.

டிக்கெட்டிற்கு முந்துங்கள்

தென்னிந்திய வாசிகளுக்கு அரிய சந்தர்ப்பம்

புரொப்ரைட்டர்:	ஆர்கனைசர்:
M. கணபதி செட்டியார், மிராசுதார்.	K. சேஷாத்திரி அய்யங்கார், அஸ்ட்ராலஜர்,

ஸ்ரீமுஷ்ணம். S. A. Dist.

"வக்கீல்" பத்திரிகை.

"வக்கீல்" பத்திரிகையின் டிராவலிங் இன்ஸ்பெக்டர் திரு. தண்டாங்கோரை T. S. வெங்கடராமன் அவர்களுக்கு எல்லா இடங்களிலும் வருட சந்தாதாரர்கள் சேர்க்கவும், விளம்பரம் சேகரிக்கவும் அதிகாரம் உண்டு.

கண்ட்ரோல்-லைசென்ஸ்-ரேஷன்-விலை நிர்ணயம்
இதர சர்க்கார் அறிக்கைகள்

சென்னை உணவுத் தாலியத் தீவிரக் கொள்முதல் உத்தரவு திருத்தம்.

மகசூல் விற்பனைத் தடை:—1951-ஆம் வருடத்திய சென்னை உணவுத் தானியத் தீவிரக் கொள்முதல் உத்தரவில் (Madras Food Grains Intensive Procurement—Order 1951.) புதிதாக 3A என்று கீழே கண்டபடி ஒரு ஷரத்துச் சேர்க்கப்பட்டிருக்கிறது. அதாவது:—ஜில்லா கலெக்டர் அல்லது அவரிடம் அதிகாரம் பெற்ற அதிகாரியிடமிருந்து எழுத்து மூலமான அனுமதி இருந்தாலொழிய எவரும் தாம் சாகுபடி செய்த உணவுத் தானிய மகசூலை (அதாவது அறுவடை செய்யாமல் நிலத்திலிருக்கும் மகசூலை—Standing crops) வேறு ஒருவருக்கும் விற்பனை செய்யவும் கூடாது; அவ்வித மகசூலை ஒருவரும் வாங்கவும் கூடாது. நிலத்தைச் சாகுபடி செய்பவர் அதன் சொந்தக்காரராக இருந்தாலும் குத்தகைதாராக இருந்தாலும், உள் குத்தகைதாராக இருந்தாலும் வேறு எந்த ஹோதாவில் சாகுபடி செய்தாலும் மேற்கண்டபடி அனுமதியின்றி மகசூலை விற்பது குற்றமாகும்.

(12—2—1952-சென்னைச் சர்க்கார் கெஜட்ரூல் சப்ளிமெண்ட்—பாகம் II - பக்கம் 23.)

* * *

[குறிப்பு:—இக்கட்டுப்பாடு உத்தரவு 11-5-1951 தேதியுள்ள சென்னைச் சர்க்கார் கெஜட்டில் பிரசுரமாகி இருக்கிறது. 1951—"வக்கீல்" ஜூலைமாத இதழ் 11-ஆம் பக்கத்தில் விளக்கப் பட்டிருக்கிறது. இக்கண்ட்ரோல் உத்தரவு தமிழ் நாட்டில் தஞ்சாவூர், நீலகிரி இந்த இரண்டு ஜில்லாக்கள் பூராவிலும், ஆந்திராவில் சில இடங்களிலும் தான் அமுலில் இருக்கிறது. தஞ்சை ஜில்லாவில், 'உணவுத் தானியம்' என்பது நெல் அல்லது அரிசியைத் தான் குறிப்பிடும். நீலகிரி ஜில்லாவில், உணவுத் தானியம் என்பது, நெல், அரிசி, சோளம், கம்பு, ராகி, கொரு, சாமை, வரகு, வாரிகலு இவைகளைக் குறிப்பிடும். உணவுத் தானியங்களை விற்பது பற்றி ஏற்கனவே இக்கண்ட்ரோல் உத்தரவில் தடைகளும் நிபந்தனைகளும் இருக்கின்றன. அறுவடைக்கு முன் நிலத்தில் பயிராக நிற்கும் மகசூலுக்கும் இக்கண்ட்ரோல் உத்தரவு இப்பொழுது இத்திருத்தத்தால் விஸ்தரிக்கப் பட்டிருக்கிறது.]

வைக்கோல் கட்டுப்பாடு உத்தரவு ரத்து

27—11—1951ல் மத்திய சர்க்காரால் பிறப்பிக்கப்பட்ட வைக்கோல் கட்டுப்பாடு உத்தரவு (Paddy Straw—Prevention of use for Packing — Prohibition Order 1951.)—அதாவது நெல் வைக்கோலை எந்தச் சாமான்களையும் 'பாக்கிங்' செய்ய உபயோகிக்க கூடாதென்ற தடை உத்தரவு—மத்திய சர்க்காரால் 28—1—1952ல் ரத்துச் செய்யப்பட்டது.

(12—2—1952 சென்னைச் சர்க்கார் கெஜட்—பாகம் II - பக்கம் 159.)

* * *

அத்தியாவசிய பண்ட சேகரிப்புத் தடை உத்தரவு திருத்தம்

அத்தியாவசியமான பண்டங்களை ஓர் அளவுக்குள்தான் வாங்கலாம் என்பது பற்றிய (The Essential Articles—Restricted Acquisition Order—1947) கண்ட்ரோல் உத்தரவின் ஷரத்தக்களை மீறுகின்றவர்கள் மீது கிரிமினல் வழக்குத் தொடர நீலகிரி ஜில்லாவில், கலெக்டருடைய முன் அனுமதியும் மற்ற ஜில்லாக்களில் ஜில்லா சப்ளை ஆபீசருடைய முன் அனுமதியும் இருக்க வேண்டுமென்று 7A. பிரிவில் இருந்தது. இது இப்பொழுது திருத்தப் பட்டிருக்கிறது. இனி நீலகிரி தவிர, மற்ற ஜில்லாக்களில் ஜில்லா சப்ளை ஆபீசர் அல்லது கலெக்டர் இருவரில் யாராவது ஒருவருடைய முன் அனுமதி வேண்டுமென்று திருத்தப்பட்டிருக்கிறது.

(22—1—1952 சென்னைச் சர்க்கார் கெஜட்ரூல் சப்ளிமெண்ட்—பாகம் II-பக்கம் 13)

* * *

ரேஷன் உத்தரவில் திருத்தம்

1947-ஆம் வருடத்திய சென்னை ரேஷனிங் உத்தரவில் (Madras Rationing Order 1947) 13 ஆவது பிரிவில் சில திருத்தங்கள்

18776

செய்யப்பட்டிருக்கின்றன. இக்கண்ட்ரோல் உத்தரவுப்படி அதிகாரம் பெற்ற அதிகாரிகள், குற்றம் சம்பந்தப்பட்டதென்று சந்தேகமுள்ள சரக்குகளைக் கைப்பற்றலாம் என்று மட்டில் இருந்தது. இப்பொழுது அச்சரக்குகளுக்கு 'மாதிரி' (Sample) எடுத்துக் கொள்ளவும் அதிகாரிகளுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதிகாரி கேட்டால், ஒவ்வொருவரும், சரக்குகள் வைக்கப்பட்டிருக்கும் இடத்திற்கு அதிகாரி போகவும், அவைகளைச் சோதனை செய்யவும், மாதிரி எடுத்துக் கொள்ளவும், கைப்பற்றிய சரக்கை எடுத்துப் போகவும், வண்டி முதலியவைகளை நிறுத்தவும், அவர் கேட்கும் கேள்விகளுக்கு உண்மையான பதில் சொல்லவும், அவர் கேட்டால் அப்பதில்களை எழுத்து மூலம் எழுதிக் கொடுக்கவும், அவர் வசமுள்ள தஸ்தவேஜுகளைக் கேட்டால் கொடுக்கவும் வசதி செய்து கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள்—என்று ஷரத்து 13 (2) திருத்தி அமைக்கப்பட்டிருக்கிறது.

(5—2—1952 சென்னைச் சர்க்கார் கெஜட்—ரூல் சப்ளிமெண்ட்—பாகம் II - பக்கம் 21.)

* * *

எரு வியாபாரிகள் லைசென்சு உத்தரவு (1949) திருத்தம்

1949-ஆம் வருடத்திய சென்னை எரு வியாபாரிகள் லைசென்சு உத்தரவின்படி கொடுக்கப்படும் லைசென்சில் (நமூனா II) ஒரு அட்டவணை சேர்க்கப்பட்டிருக்கிறது. முதலில் லைசென்சு கொடுக்கப்பட்ட தேதியும், பிறகு ஒவ்வொரு வருடத்திற்கும் லைசென்சை புதுப்பித்துக் கொள்ளும் தேதி, லைசென்சு தொகை கட்டிய சலான், அபராதம் செலுத்தியிருந்தால் அதன் தொகை, முதலிய விவரங்களை 'லைசென்சின்' அடியிலேயே இந்த அட்டவணையில் குறிப்பிடும்படி நமூனாவின் வாசகம் திருத்தப்பட்டிருக்கிறது.

(22—1—1952 சென்னைச் சர்க்கார் கெஜட்—ரூல் சப்ளிமெண்ட்—பாகம் II - பக்கம் 15.)

* * *

சரக்கு சப்ளை - விலை சட்டம் (1950)

ராஜ்ய சர்க்காரின் அதிகாரங்கள்:— இச்சட்டத்தில் (Supply and Prices of Goods Act 1950) செக்ஷன் 19 (1)இன்படி இச்சட்டத்திற்குட்பட்ட சரக்குகளைப் பற்றிய வியாபாரம் சம்பந்தமாய் எந்த வியாபாரியோ, உற்பத்தியாளரோ எவ்விதக் கணக்குகள் வைத்துக்கொள்ள வேண்டுமென்று உத்தரவிட மத்திய சர்க்காருக்கு அதிகாரமுண்டு. இந்த அதிகாரத்தைச் சென்னை ராஜ்யம் சம்பந்தப்பட்டவரை சென்னைச் சர்க்காரே செலுத்தும்படி மத்திய சர்க்காரால் சென்னைச் சர்க்காருக்கு அதிகாரம் மாற்றிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்படிச் செய்ய செக்ஷன் 22இன்படி மத்திய சர்க்காருக்கு உரிமை உண்டு.

(12—2—1952 சென்னைச் சர்க்கார் கெஜட்—பாகம் II - பக்கம் 159.)

* * *

சணலுக்கும் இச்சட்டம் உண்டு.

சரக்கு சப்ளை — விலைச் சட்டம் (1950) (Supply and Prices of Goods Act-1950) என்பது அச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் சரக்குகளுக்கு பட்டுமே முதலில் அமுலுக்கு வந்தாலும், வேறு சரக்குகளுக்கும் இச்சட்டத்தை விஸ்தரிக்க மத்திய சர்க்காருக்கு செக்ஷன் 3இன்படி அதிகாரம் உண்டு. அதை அனுசரித்து இச்சட்டத்தைச் சணல், சணலால் செய்யப்பட்ட எல்லாச் சாமான்கள் இவைகளுக்கும் மத்திய சர்க்கார் விஸ்தரித்திருக்கின்றனர். தவிர, சென்னை சம்பந்தப்பட்ட வரையில் இச்சரக்குகளின் உற்பத்தி விநியோகம், விற்பனை, விலை முதலிய விஷயங்களைப்பற்றி ஒழுங்கு செய்யவும், அதற்காக லைசென்சு, பர்மிட் முதலியவைகள் வழங்கவும் சென்னை சர்க்காருக்கே அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

(12—2—195 சென்னைச் சர்க்கார் கெஜட் பாகம் II - பக்கம் 159.)

* * *

விலை நிர்ணயம்

'கௌ அண்டு கேட் மில்க்' (Cow and Gate Milk) 1950-ஆம் வருடத்திய சரக்கு சப்ளை விலைச் சட்டப்படி (Supply and Prices of Goods Act 1950) மத்திய சர்க்காரால் கீழே கண்டபடி சில்லறை வியாபாரத்தில், எந்த விலைக்கு மேல் விற்கக் கூடாதென்று உச்ச விலை நிர்ணயம் செய்யப் பட்டிருக்கிறது.

கௌ அண்டு கேட் மில்க்.

1 பவுண்டு டின் ரூ. 4—7—0
2 பவுண்டு டின் ரூ. 8—9—0

(S. R. O. 2033—22-1-1952 சென்னைச் சர்க்கார் கெஜட் — பாகம் II — பக்கம் 66)

மது விலக்குச் சட்ட அறிக்கை

'பிராந்தி' லைசென்சிகள் அனுப்பவேண்டிய ரிடர்ன்:-

மது விலக்குச் சட்டப்படி (Madras Prohibition Act 1937) கொடுக்கப்படும் லைசென்சில் (நமூனு II) இருக்கும் 7ஆவது நிபந்தனை கீழே கண்டபடி திருத்தி அமைக்கப் பட்டிருக்கிறது. அதாவது:— பிராந்தி (Brandy) விற்பனைக்காக லைசென்சு வாங்கிக் கொண்டிருப்பவர்கள் ஒவ்வொரு மாதமும் 'டிப்டி புரொஹிபிஷன் ஆபீசர்கள்' அல்லது 'டிப்டி சூப்பிரண்டெண்ட் — (போலீஸ்)' மூலம் மாசாந்தரக் கணக்குகள் என்ற 'ரிடர்ன்' (Return) அனுப்ப வேண்டும். இவ்வதிகாரிகள் அக் கணக்குகளைச் சரி பார்த்து, கலெக்டருக்கு அனுப்புவார்கள். வியாபாரி அனுப்பும் 'ரிடர்னி'ல் காணப்பட வேண்டிய விவரங்கள்:— (1) பிராந்தி விற்பனைத் தேதி (2) விற்பனை செய்த அளவு (3) டாக்டர்கள் பெயர் (4) எதற்காகப் பிராந்தி உபயோகிக்கப்பட வேண்டுமென்று டாக்டர்கள் சிபார்சு (பிரிஸ்கிருப்ஷன்) கொடுத்தது. (5) எந்த வியாதியஸ்தர்களுக்காகப் பிராந்தி கொடுக்கப்பட்டதோ அவர்களின் பெயர்கள் — இவ்விவரங்களைக் கண்டு மேற்கண்ட 'ரிடர்ன்' அனுப்பவேண்டும்.

(22—1—1952-சென்னைச் சர்க்கார் கெஜட் —பாகம் I — பக்கம் 73.)

* * *

மது விலக்குச் சட்டம்—மருந்து டாய்லெட் சம்பந்தமான இரண்டு உத்தரவுகள் ரத்துச் செய்யப்பட்டன.

கீழே கண்ட தங்களுடைய இரண்டு உத்தரவுகளையும் சென்னை ரெவன்யூ போர்டார் ரத்துச் செய்து விட்டனர்:— (1) ஸ்பிரிட் கலந்த மருந்துகளைப் பற்றி நிபந்தனைகள் ஏற்படுத்திய 12—7—1951 தேதியுள்ள உத்தரவு (இது 24—7—1951 தேதி சென்னைச் சர்க்கார் கெஜட் — பாகம் II 1029 முதல் 1031 உள்ள பக்கங்களில் இருக்கிறது.) (2) ஸ்பிரிட் கலந்த டாய்லட் (வாசனை) சாமான்களைப் பற்றி நிபந்தனைகள் ஏற்படுத்திய 27-2-1951 தேதியுள்ள உத்தரவு. (இது 13—3—1951 தேதி சென்னைச் சர்க்கார் கெஜட் — பாகம் II பக்கம் 378இல் இருக்கிறது.) மேற்கண்ட இரண்டு உத்தரவுகளும் 9—1—1952 முதல் ரத்துச் செய்யப்பட்டன.

(22-1-1952 - சென்னைச் சர்க்கார் கெஜட் - பாகம் II — பக்கம் 83.)

நியூஸ்பிரிண்ட் காகிதம் பொது அனுமதி

ஷீட்டுகளாக இருக்கும் 'நியூஸ் பிரிண்ட்' காகிதத்தைப் பத்திரிகைகள் தவிர மற்ற உபயோகங்களுக்கும் 15—6—1951 முதல் 6 மாதங்களுக்கு உபயோகிக்கலாம் என்று மத்திய சர்க்காரால் கொடுக்கப்பட்ட பொது அனுமதி 15—12—1951-லிருந்து இன்னும் 3 மாதங்களுக்கு நீடிக்கப் பட்டிருக்கிறது. அதாவது 15—3—1951 வரை இப்பொது அனுமதி உண்டு.

(22—1—1952 — சென்னைச் சர்க்கார் கெஜட் — பாகம் II — பக்கம் 67.)

கிராமப் பஞ்சாயத்துச் சட்ட அறிக்கை

1950ஆம் வருடத்திய சென்னை கிராமப் பஞ்சாயத்துச் சட்டத்தின் செக்ஷன் 80இன்படி கிராமப் பஞ்சாயத்துக்கள் பொது மார்க்கெட்டுகள் (Public Markets) ஏற்படுத்த உரிமை உண்டு. கிராமப் பஞ்சாயத்துச் சட்டம் அமுலுக்கு வந்த தேதியாகிய 1-4-1951-க்குப் பின்பு எவரும் பஞ்சாயத்து எல்லைக்குள் புதிதாகச் சொந்த மார்க்கெட்டுகள் (Private Markets) ஆரம்பிக்கக் கூடாதென்றும்; அதற்கு முன்பே உள்ள சொந்த மார்க்கெட்டுக்களையும் சர்க்காரால் குறிப்பிடப்படும் தேதிக்குப் பின்பு தொடர்ந்து நடத்தக் கூடாதென்றும் செக்ஷன் 81இல் குறிப்பிடப் பட்டிருக்கிறது. இதை அனுசரித்த இப்பொழுது சர்க்காரால் தேதி குறிப்பிடப்பட்டிருக்கிறது. 1952—53 வருடம் ஆரம்பமான பிறகு, அதாவது 1—4—1952க்குப் பின்பு, எவரும் சென்னை ராஜ்யத்திலுள்ள எந்தக் கிராமப் பஞ்சாயத்து எல்லைக்குள்ளும் சொந்த மார்க்கெட்டுகள் நடத்தக் கூடாதென்று இப்பொழுது சர்க்கார் உத்தரவிட்டிருக்கின்றனர். (5—2—1952— சென்னைச் சர்க்கார் செஜட் — பாகம் IA— பக்கம் 66 - G. O. 139.)

குறிப்பு:—கல்வி, தர்மம், அல்லது மத விஷயங்களுக்காக, ஒரு சொந்த மார்க்கெட்டின் நிகர வருமானம் செலவு செய்யப்பட்டு வந்தால், அவ்வித மார்க்கெட்டுகளுக்கு மட்டில் இவ்விதி கிடையாதென்று செக்ஷன் 81-இலேயே இருக்கிறது.

தொழிலாளர் பகுதி

[இப்பகுதியில் தொழிற்சாலைச் சட்டம், ஷாப் சட்டம், தொழில் தகராறு சட்டம், குறைந்தபட்சக் கூலிச் சட்டம் முதலியவை பற்றிய சட்ட விஷயங்கள் விளக்கப்படும்.]

குறைந்த பட்சக் கூலிச் சட்டம்

1948-ஆம் வருடத்திய குறைந்த பட்சக் கூலிச் சட்டப்படி (Minimum wages Act, 1948) மத்திய சர்க்காரைச் சேர்ந்த 'பப்ளிக் ஒர்க்ஸ் டிபார்ட்மெண்டாரா'ல் நடத்தப்படும் ரோடு வேலைகளிலும் கட்டட வேலைகளிலும் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு, குறைந்த பட்சமாக, அடியில் கண்டபடி சம்பளம் கொடுக்கப்படவேண்டுமென்று, மத்திய சர்க்கார் 27-12-1951-ல் உத்தரவிட்டிருக்கின்றனர். அன்று முதலே இவ்வுத்தரவு அமுலுக்கு வந்து விட்டது.

	எல்லாம் சேர்த்து தினசரிச் சம்பளம் ரூ.	அ.	பை.
(1) சென்னை			
மஸ்தூர் - (ஸ்திரீ)	1	14	0
12 வயதுக்கு மேற்பட்ட சிறுவன்	0	12	0
(2) திருநெல்வேலி			
மஸ்தூர் (ஸ்திரீ)	0	10	0
12 வயதுக்கு மேற்பட்ட சிறுவன்	0	10	0
(3) தூத்துக்குடி			
மஸ்தூர் (ஸ்திரீ)	0	10	0
12 வயதுக்கு மேற்பட்ட சிறுவன்	0	10	0

(29-1-1952 சென்னைச் சர்க்கார் கெஜட் பாகம் I-பக்கம்-115.)

ஷாப் சட்டம்

நீக்கப்பட்ட சிப்பந்தி அப்பீல் செய்யக் கெடு:—நீக்கப்பட்ட சிப்பந்தி தொழிலாளர் நஷ்டஈடு கமிஷனருக்கு (Commissioner for workmen's Compensation) ஷாப் சட்டப்படி அப்பீல் செய்யவேண்டுமானால், அவர் நீக்கப்பட்ட தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் அப்பீல் செய்யவேண்டுமென்று இருந்த விதி 9 இப்பொழுது திருத்தி அமைக்கப்பட்டிருக்கிறது. அதாவது:—அச்சிப்பந்தியை வேலையை விட்டு நீக்கும் (முதலாளியின்) உத்தரவானது என்று தினம் சிப்பந்தியிடம் நேரில் கொடுக்கப்படுகிறதோ, அதிலிருந்து 30 நாட்களுக்குள் அப்பீல் செய்யவேண்டும்; நேரில் இவ்வுத்தரவைச் சிப்பந்தியிடம் கொடுப்பது சாத்தியமில்லாவிட்டால், சிப்பந்தி கடைசியாக வசித்து வந்த விலாசத்திற்கு அவ்வுத்தரவு ரிஜிஸ்டர் தபாலில் அனுப்பப்படவேண்டும். சாதாரணமாய் என்று தினம் அவருக்கு அத்தபால் கிடைத்திருக்க வேண்டுமோ அன்று முதல் 30 நாட்களுக்குள்ளும் அச்சிப்பந்தி அப்பீல் செய்யலாம் என்று விதி 9 திருத்தி அமைக்கப்பட்டிருக்கிறது. (5-2-1952—சென்னைச் சர்க்கார் கெஜட் — ரூல் சப்ளிமெண்ட் — பாகம் I-பக்கம் 23 - G. O. 107.)

* * *

பால் சப்ளை டிப்போக்கள்—ஷாப் சட்ட விதி விலக்கு

14-11-1951 முதல் மறுபடியும் ஒரு வருடத்திற்குச் சென்னை ராஜ்யத்திலுள்ள எல்லாப் பால் சப்ளை டிப்போக்களுக்கும், ஷாப் சட்டத்தின் செக்ஷன் 7 (1) ல் கண்ட விதி கிடையாதென்று சர்க்காரால் விதி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. (செக்ஷன் 7 (1) என்பது ஒவ்வொரு கடையும் தினசரி எந்த மணி நேரத்திற்குமுன் திறக்கக் கூடாதென்றும் எந்த மணி நேரத்திற்குப்பின் திறந்து வைத்திருக்கக் கூடாதென்றும் கட்டாயப்படுத்தும் விதி.)

(5-2-1952-சென்னைச் சர்க்கார் கெஜட்—பாகம் I-பக்கம் 150 - G. O. 50.)

மால்கோ கிரீம்

(வெளி பிரயோகத்திற்கு மட்டும்)

சொரி சிரங்கு, பெரிய சிரங்கு, கரப்பான் கடுவான், நீர் கடுவான், மேகப்புண், முகப்பரு, கோடை கொப்பளம், பித்த வெடிப்பு, ஆராத புண், தீ புண், கடவாய் புண், உதடு புண், பெண்களால் ஏற்படும் துர்நீர் சம்மந்தமான புண்கள், குஷ்டரோக புண்கள், கிரந்தி, சிரங்கு புண், தோலைப்பற்றிய சகல வியாதிகளுக்கும் கைகண்ட மருந்து.

மால்கோ

ரிங்சால்

(வெளி உபயோகத்திற்கு மட்டும்)

ஊரல், படை, கடி, தேமல், பூச்சி வெட்டு, வண்டுகடி, கக்கூஸ்பத்து முதலிய தோலைப் பற்றிய சகல வியாதிகளுக்கும் கைகண்ட மருந்து.

மால் & கம்பெனி,

கும்பகோணம், :: மதராஸ்.

சென்னை அறநிலையப் பாதுகாப்புச் சட்ட விதிகள்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

[சென்னை அறநிலையப் பாதுகாப்புச் சட்டம் எனப்படும் சென்னை இந்துமத-தர்ம பரிபாலனச் சட்டத்தின் ஷரத்துக்களை அனுசரித்து, சென்னைச் சர்க்காரால் விதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இவ்விதிகள் "வக்கீல்"—1952 பிப்ரவரி இதழ் முதல் தொடர்ச்சியாக விளக்கம் செய்யப்பட்டு வருகின்றன. இச்சட்டத்தின் சுருக்கம் "வக்கீல்" 1951 அக்டோபர், நவம்பர் இதழ்களிலும் 1952 ஜனவரி இதழிலும், அட்டவணைகளுடன் விளக்கப்பட்டிருப்பதை நேயர்கள் கவனிக்கவும். கீழே இருப்பது சென்ற மாதம் விளக்கப்பட்ட இச்சட்ட 'விதி'களின் தொடர்ச்சி.]

உபரி வருமானத்தைச் செலவு செய்வதுபற்றி.

இந்து மத-தர்ம பரிபாலனச் சட்டத்தின் செக்ஷன் 70 (1) இன்படி ஒவ்வொரு வருடமும், மார்ச்சு மாத முடிவுக்குள்; ஒவ்வொரு மத ஸ்தாபனத்தின் டிரஸ்டியும் அடுத்த ஏப்ரல் முதல் ஆரம்பமாகும் ஒரு வருடத்திற்கான வரவு செலவுத் திட்டத்தைத் தயார் செய்து கமிஷனருக்கு அனுப்பவேண்டும். இதில் மாமூல்படி திட்டச் செலவுகள், கடன் இருந்தால் அதைத் திருப்பிக் கொடுக்க ஏற்பாடு, கட்டடங்களின் ரிபேர் செலவுகள் இவைகளைப்பற்றி வகை செய்யப்பட்டிருக்க வேண்டுமென்று செக்ஷன் 70 (2) வற்புறுத்துகின்றது. இம்மூன்று செலவுகளுக்கான தொகைகள் போகப் பாக்கி வருமானம் இருந்தால், அதை எப்படிச் செலவு செய்யலாமென்று செக்ஷன் 30-இல் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதாவது கமிஷனர் அல்லது பிரதேசக் கமிட்டியின் அனுமதி பெற்று மீதி வருமானத்தைச் சீடர்கள், யாத்ரீகர்கள், அல்லது வழிபாடு செய்பவர்களின் தேக ஆரோக்கியம், பாதுகாப்பு அல்லது சௌகரியத்துக்காகவும், அர்ச்சகர்கள், அத்யாபகர்கள், வேத பாராயணம் செய்பவர்கள், ஓதுவார்கள் ஆகியவர்களுக்குப் பயிற்சி அளிக்கவும் செலவு செய்யலாம். இவ்விரண்டு வகைச் செலவுகளும் செய்தும் ஒரு மதஸ்தாபனத்திற்கு மீதி வருமானம் இருந்தால் அதை, செக்ஷன் 59 (1)ல் கண்ட காரியங்களுக்காகச் செலவு செய்யலாம் என்று செக்ஷன் 31-இல் மதஸ்தாபன டிரஸ்டிகளுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இக்காரியங்களுக்காக அவர்கள் செலவு செய்ய டிப்டி கமிஷனரின் எழுத்து மூலமான அனுமதியை வாங்கிய பிறகுதான் அவ்விதம் செய்யலாம். டிப்டி கமிஷனர் இது சம்பந்தமாக அனுமதி கொடுக்கும் முன்பு, டிரஸ்டியின் உத்தேசத்தைப்பற்றிய விவரங்களை 'விதி'களின்படி பிரசித்தம் செய்யவேண்டுமென்று செக்ஷன் 31 (1)-இல் இருப்பதால், அதற்காகச் சில விதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அவையாவன:— அந்த மத ஸ்தாபனத்தில் உபரி வருமானம் எவ்வளவு, எந்த எந்தக் காரியங்களுக்காக எவ்வளவு எவ்வளவு தொகைகள் செலவு செய்ய டிரஸ்டியால் அனுமதி கேட்கப்படுகிறது; எந்தத் தேதிக்குள் (இது 3 வாரத்துக்குமேல் இருக்கவேண்டும்) இதற்கு ஆட்சேபனைகளோ, ஆலோசனைகளோ அனுப்பவேண்டும்; என்றையதினம் இது சம்பந்தமாய் டிப்டி கமிஷனர் விசாரணை நடத்துவார் என்ற விவரங்களைக் கண்டு நோட்டீஸ் பிரசுரம் செய்யப்படவேண்டும். இந்த நோட்டீஸின் நகல் ரிஜிஸ்டர் தபால் மூலம் டிரஸ்டிகளுக்கு அனுப்பப்படவேண்டும். கட்டளை டிரஸ்டிகளால் இவ்வித அனுமதி கேட்கப்பட்டால், அக்கட்டளை எந்த மதஸ்தாபனத்தைச் சேர்ந்ததோ அதன் டிரஸ்டிகளுக்கும் இந்த நோட்டீசு அனுப்பவேண்டும்; இந்த நோட்டீசின் நகல்கள், உதவிக் கமிஷனர் ஆபீசிலும், டிப்டி கமிஷனர் ஆபீசிலும், சம்பந்தப்பட்ட கோயில் அல்லது மடத்திலும் ஒட்டப்படவேண்டும்; தவிர கோயில் அல்லது மடம் இருக்கும் இடத்திற்கான முனிசிபாலிட்டி அல்லது கிராமச் சாவடிகளின் ஆபீசிலோ, கிராமச்சாவடி இல்லாவிட்டால் வேறு பொது இடங்களிலோ, பிரசுரம் செய்யப்பட வேண்டும். மேலும் டிப்டி கமிஷனருக்கு யுக்தமாகத் தோன்றும் முக்கிய இடங்களிலும் பிரசுரம் செய்யப்படவேண்டும். சொத்துக்கள் இருக்கும் இடங்களிலும் பிரசுரம்

செய்யலாம். இவ்விதம் பிரசுரம் செய்த பிறகு டிப்டி கமிஷனரால் விசாரணை செய்யப்பட்டு, அவர் அச்செலவுகளைச் செய்ய அனுமதி கொடுத்தால் அவ்விஷயமும் மேலே கண்ட விதமே பிரசித்தம் செய்யப்படவேண்டும். டிப்டி கமிஷனருடைய உத்தரவு ஜில்லா கெஜட்டிலும் (தாய்ப் பாஷையில்) பிரசுரம் செய்யப்படவேண்டும். சென்னையிலிருக்கும் ஸ்தாபனங்கள் விஷயமாயும், பல ஜில்லாக்களில் கட்டளைகள் இருக்கும் மதஸ்தாபனங்கள் விஷயமாயும் ஏற்படும் இவ்வித உத்தரவுகள் சென்னைச் சர்க்கார் கெஜட்டில் (Fort St. George Gazette) பிரசுரம் செய்யப்படவேண்டும்.

அப்பீல் கெடு:—மேற்கண்டபடி டிப்டி கமிஷனர் செய்யும் உத்தரவுகளின்மீது எவரும் கமிஷனருக்கு அப்பீல் செய்யலாமென்று செக்ஷன் 31 (2) இல் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மேற்கண்டபடி கெஜட்டில் டிப்டி கமிஷனருடைய உத்தரவு பிரசுரம் செய்யப்படும் தேதியிலிருந்து இரண்டு மாதங்களில் அப்பீல் செய்யப்பட வேண்டுமென்று 'விதி'யில் அப்பீல் கெடு நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது.

* * *

சொத்து ஜவாப்தாரியின் பேரில் செய்யப்படவேண்டிய தர்மங்களையும் கைங்கரியங்களையும் பற்றிய மனுக்கள்.

சொத்து ஜவாப்தாரியின் பேரில் ஒரு கோயில் அல்லது மடத்தில் செய்யப்படவேண்டிய கட்டளைகள் (அதாவது தர்மங்களோ கைங்கரியங்களோ,) செய்யப்படா விட்டால், அவற்றை செய்வதற்கான செலவுகளைச் செலுத்தும்படி கோயில் அல்லது மடத்தின் டிரஸ்டியானவர், சொத்து யாரிடமிருக்கிறதோ அவரைக் கேட்கலாம். அவர் கொடுக்காவிட்டால், அத்தொகை எவ்வளவு என்று நிர்ணயம் செய்யவேண்டுமென்று டிரஸ்டியானவர், டிப்டி கமிஷனருக்கு, செக்ஷன் 32(1) இன்படி ஒரு மனுப் போடலாம். சொத்து வைத்திருப்பவர் வேருகவும், தர்மம் அல்லது கைங்கரியம் செய்யவேண்டியவர் வேருகவும் இருந்து, சொத்து வைத்திருப்பவரே அச்செலவுகளைச் செய்திருந்தாலும் அல்லது அச்செலவுகள் அவரிடமிருந்து வசூல் செய்யப்பட்டிருந்தாலும், அவர் அத்தொகைகள் தமக்கு திரும்பக் கிடைக்க வேண்டுமென்று கட்டளை செய்ய வேண்டியவர் மீது, டிப்டி கமிஷனரிடம் செக்ஷன் 32 (2) இன்படி ஒரு மனுக் கொடுக்கலாம்.

இவ்வித மனுக்களை விசாரிக்குமுன் டிப்டி கமிஷனர் சொத்து வைத்திருப்பவருக்கோ, அல்லது கட்டளை செய்யவேண்டியவருக்கோ இம்மனு விஷயத்தை ரிஜிஸ்டர் தபால் மூலம் தெரிவித்து, விசாரணை நடத்தினுல் போதுமென்று இது சம்பந்தமாக ஒரு விதி ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. தபால் நோட்டீசை வேண்டாமென்று மறுதலித்தாலும், அவர் நோட்டீசு பெற்றுக்கொண்டதுபோல் தாகும். வேணுமென்று நோட்டீசைப் பெற்றுக் கொள்ளாமலும் மறுதலிக்காமலும் உழற்றிஞலும், அவருடைய வாசஸ்தலத்தில் நோட்டீசை ஒட்டினுல் போதுமென்று இவ்விதியில் காணப்பட்டிருக்கிறது.

(குறிப்பு:—டிப்டி கமிஷனருடைய உத்தரவின் பேரில் இரண்டு மாதங்களுக்குள் கமிஷனருக்கு அப்பீல் செய்யலாம். முடிவாக ஏற்படும் உத்தரவை நிறைவேற்ற ஜில்லா கலெக்டருக்கு மனுப் போடவேண்டும். நிலக் கிஸ்தியைப்போல் இத்தொகையும் செலவு தொகைகளும் வசூல் செய்யப்பட்டு மனுதாரிடம் கொடுக்கப்படும்.)

* * *

இனம் நிலங்களைச் சர்க்காரே மறுபடியும் எடுத்துக் கொண்டு திரும்பக் கொடுப்பது பற்றி நோட்டீசுகள்.

ஒரு மத ஸ்தாபனத்திற்காகச் சர்க்காரால் கொடுக்கப்பட்ட 'இனம்' நிலங்களோ, அல்லது சர்க்காரால் ஊர்ஜிதம் செய்யப்பட்ட 'இனம்' நிலங்களோ விற்பனை செய்யப்பட்டிருந்தாலும், தானமாகக் கொடுக்கப்பட்டிருந்தாலும், அடமானம் வைக்கப்பட்டிருந்தாலும், பரிவர்த்தனை செய்யப் பட்டிருந்தாலும், 5 வருடங்களுக்கு மேல் குத்தகை கொடுக்கப் பட்டிருந்தாலும்—இவை எல்லாம் செல்ல மாட்டா என்று செக்ஷன் 35ல் இருக்கிறது.

ஆனல் சர்க்கார் அனுமதி பெற்று, தானம் தவிர மேற்கண்ட எவ்விதமான பராதீனங்களையும் செய்யலாம். இவ்விதம் பராதீனம் செய்ய டிரஸ்டிகள் சர்க்காருக்குப் போடும் அனுமதி மனுக்கள் எவ்விதம் பிரசுரம் செய்யப்படவேண்டுமென்று விதிகள் ஏற்பட்டிருக்கின்றன. டிரஸ்டிகள் செய்ய உத்தேசித்திருக்கும் பராதீனங்களைப் பற்றிய விவரங்கள்

எல்லாம் கோயில் அல்லது மடம் இருக்கும் இடங்களில் வாசிக்கப்படும் ஒரு தினசரிப் பத்திரிகையில் அப்பிரதேச பாஷையில் ஒரு 'நோட்டீஸ்' பிரசுரம் செய்யப்பட வேண்டும். தவிர, கோயில் அல்லது மடத்தின் வாயிலிலும், அவ்விடத்திற்கான முனிசிபல் ஆபீஸ் அல்லது கிராமச் சாவடியிலும், கமிஷனர், உதவிக் கமிஷனர் ஆபீசுகளிலும் பிரசுரம் செய்யப்பட வேண்டும்.

இனம் நிலங்களை வைத்திருக்கும் உத்தியோகஸ்தர் அல்லது ஊழியக்காரர் மனுப் போட்டால், கோயில் அல்லது மடத்தின் டிரஸ்டிகளுக்கு ரிஜிஸ்டர் தபால் மூலம் இதைப்பற்றி நோட்டீசு அனுப்பப்பட வேண்டும்.

இவ்விதம் பிரசுரம் செய்யப்படும் நோட்டீசுகளில், ஆட்சேபனைகளையும் ஆலோசனைகளையும் தெரிவித்துக் கொள்ள ஒரு கெடு குறிப்பிடப்பட்டிருக்கும். சர்க்கார் முடிவாக அனுமதி கொடுத்தால், அத்துடன் நிபந்தனைகளையும் ஏற்படுத்தலாம். பராதீனத்தால் கிடைக்கும் தொகைகளை என்ன செய்ய வேண்டுமென்றும், அடமானத்தின் பேரில் கடன் வாங்க அனுமதி கொடுக்கப்பட்டால் அக்கடனை எப்படித் திரும்ப அடைத்து வரவேண்டு மென்றும் யுக்தமான நிபந்தனைகளை ஏற்படுத்தச் சர்க்காருக்கு இவ்விதிகள் அதிகாரம் கொடுக்கின்றன.

(25—9—1951 தேதியுள்ள சென்னை சர்க்கார் கெஜட்-ரூல் சப்ளிமெண்ட் — பாகம் I —பக்கம் 523 முதல்.)

(தொடரும்)

தமிழில் சட்டப் புத்தகங்கள்

"வக்கீல்" 1951-ஆம் வருடம் ஜனவரி முதல் டிசம்பர் வரை உள்ள இதழ்கள் பைண்டு செய்யப்படாமல் இருப்பது செட் ஒன்று

விலை ரூ. 3 2 0

ஷை பைண்டு செய்யப்பட்டது ரூ. 4 0 0

தமிழில் விற்பனை வரி ரூ. 2 0 0

தபால் சார்ஜ் பிரத்தியேகம். அணா 8 சேர்த்து அனுப்பினால், ரிஜிஸ்டர் தபாலில் அனுப்பப்படும்.

கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்:—

மானேஜர்,
"வக்கீல்" காரியாலயம்,
தபால் பெட்டி 26, கும்பகோணம் (S.I.)

குணம்
மணம்
சுத்தம்
ஆரோக்கியம்
சிக்கனம்
உடையது.
நறுமணசீயக்காய்த்தூள்
REGD. No. 13817.
வெண்சங்கு நறுமண சீயக்காய்த் தூள்
உரிமை:
S. பெத்தண்ண நாடார்
.. கீழவாசல்—தஞ்சாவூர்..

"வக்கீல்" பத்திரிகை ஒவ்வொரு ஆங்கில மாதம் முதல் தேதியிலேயே பிரசுரம் செய்யப்பட்டு வருகிறது. தபால் மூலம் அனுப்பப்படும் பத்திரிகை 5-தேதிக்குள் உங்களிடம் கிடைக்காவிட்டால், உடனே "வக்கீல்" காரியாலயத்திற்கு ஒரு கார்டு எழுதவும். சந்தா நம்பரையும் விலாசத்தையும் புரியும்படி எழுதவும்.

ஏஜண்டுகள் மூலம் "வக்கீல்" வாங்கிவரும் இந்தியாவிலிருக்கும் நேயர்களுக்கும் 5-தேதிக்குள் "வக்கீல்" கிடைக்காவிட்டால் ஆபீசுக்கு எழுதி தருவித்துக் கொள்ளலாம்.

இப்பகுதியில் நமது சுப்ரீம் கோர்ட், ஹைகோர்ட்டுகள் முதலிய உயர் நீதி மன்றங்களின் நீதிபதிகளால் அளிக்கப்படும் தீர்ப்புகளின் முக்கிய அம்சங்களை ஒட்டி சட்ட விளக்கம் செய்யப்படும். சட்ட தத்துவங்களை விளக்கும் அன்னிய நாடு உயர் நீதிபதிகளின் அபிப்பிராயங்களையும் நேயர்கள் இங்கே வாசிக்கலாம்.

வியாபாரத்தைத் தடுத்த மத்திய சர்க்கார் உத்தரவு செல்லாமல் போயிற்று. பருத்திக் கட்டுப்பாடு உத்தரவின் ஷரத்துக்கள்.

[ஆதாரம்:—1951 (2) மதராஸ் லா ஜர்னல் 658. சென்னை ஹைகோர்ட்]

1950-ஆம் வருடத்தில், மத்திய சர்க்காரால் பருத்திக் கட்டுப்பாடு உத்தரவு (Cotton Control Order - 1950) என்று ஒரு கண்ட்ரோல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இக் கட்டுப்பாடு உத்தரவால் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தை உபயோகித்து 'டெக்ஸ்டைல் கண்ட்ரோலர்' என்ற அதிகாரியால் இரண்டு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன. இவைகளில் S.R.O. 379 என்ற உத்தரவால், பருத்தி விளையும் ஜில்லாக்கள் 5 பிரதேசங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒரு பிரதேசத்திலுள்ள பருத்தியை இதற்கான அதிகாரிகளுடைய 'பர்மிட்' இல்லாமல் வெளியே எவரும் கொண்டு போகவும் அனுப்பவும் கூடாதென்று தடை செய்யப்பட்டது. மற்றொன்று, S.R.O. 388 என்பது, மேற்கண்ட பிரதேசங்களில் 5 ஆவது பிரதேசமாகிய திருநெல்வேலி பிரதேசத்தில், சில குறிப்பிட்ட நபர்களுக்குத்தான் எவரும் பருத்தியை விற்கவேண்டும் என்றும் மற்ற எவருக்கும் பருத்தி விற்கக் கூடாதென்றும் தடை செய்யும் உத்தரவு.

இந்த இரண்டு உத்தரவுகளும் அரசியல் அமைப்புச் சட்டத்தால் மக்களுக்குக் கொடுக்கப்பட்ட தொழில் சுதந்தரத்தைப் பறிப்பதாக இருப்பதால், அவைகளை ரத்துச் செய்யவேண்டுமெனவும் சில பருத்தி சாகுபடிக்காரர்களும் சில பருத்தி வியாபாரிகளும் சென்னை ஹைகோர்ட்டுக்கு 'ரிட்' மனுக்கொடுத்தனர்.

முதல் உத்தரவு சம்பந்தப்பட்ட வரையில், அரசியல் அமைப்புச் சட்டத்தின் 19 ஆவது ஷரத்துப்படி ஒவ்வொரு பிரஜைக்கும் தம் தம் இஷ்டப்படி சொத்துக்களை வாங்கவும் வைத்துக் கொள்ளவும் விற்கவும் ஓர் சுதந்தரம் இருந்தாலும் பொதுமக்களின் நன்மையை உத்தேசித்து நியாயமான நிபந்தனைகளை (Reasonable restrictions) ஏற்படுத்த அரசாங்கத்திற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறதென்றும்; ஒரு பிரதேசத்திலிருந்து வேறு பிரதேசத்திற்குப் பருத்தியை சர்க்கார் அனுமதியின்றி கொண்டு போகக்கூடாதென்பது பொதுமக்களின் நன்மைக்காகவே ஏற்படுத்தப்பட்ட ஒரு நியாயமான நிபந்தனை தான் என்றும் ஆகையால் முதல் உத்தரவு செல்லுபடியுள்ளதென்றும் நீதிபதிகள் அபிப்பிராயப்பட்டனர்.

ஆனால் இரண்டாவது உத்தரவு செல்லாதெனவும் நீதிபதிகள் தீர்ப்பளித்தனர். குறிப்பிட்ட நபர்களுக்குத் தான் (Nominees) பருத்தியை ஒருவர் விற்கவேண்டுமென்ற சர்க்கார் உத்தரவிட்டிருப்பது 'தொழில் சுதந்தரம்' சம்பந்தமாக மக்களுக்கு அரசியல் அமைப்புச் சட்டத்தால் கொடுக்கப்பட்ட ஜீவாதார உரிமையைப் பாதிக்கும் ஒரு உத்தரவென்றும்; ஏராளமான பருத்தி வியாபாரிகள் இதற்காக லைசென்சும் வாங்கிக்கொண்டும் இருக்கும்போது ஏதோ சில குறிப்பிட்ட நபர்களுக்குத்தான் எவரும் பருத்தியை விற்பனை செய்யவேண்டுமென்று உத்தரவிடுவது பொதுமக்களின் நன்மைக்காகச் செய்யப்படும் ஒரு நியாயமான நிபந்தனை ஆகாதென்றும்; ஆகையால் அது செல்லாதென்றும் உயர் நீதிபதிகள் அபிப்பிராயப்பட்டு இரண்டாவது உத்தரவை ரத்துச் செய்தனர்.

விற்பனை வரிச் சட்டத்தைப்பற்றிய ஒரு முக்கிய தீர்ப்பு—'கமிஷன் ஏஜண்டு'களும், தரகர்களும் வியாபாரிகளாவார்களா ?

[ஆதாரம்:— 1952 (1) மதராஸ் லா ஜர்னல்—சமீப வழக்குகளைப் பற்றிய குறிப்புகள்—பக்கம் 13.]

விற்பனை வரிச் சட்டத்தில் ஏற்பட்ட ஒரு மிக முக்கிய பிரச்னையானது சமீபத்தில் சென்னை ஹைகோர்ட்டில் மூன்று உயர் நீதிபதிகள் அடங்கிய ஒரு நிறை மன்றத்தால் (Full Bench) தெளிவாக முடிவு செய்யப்பட்டது. இதற்குமுன் சென்னை ஹைகோர்ட்டில் இரண்டு நீதிபதிகள் சேர்ந்து 'கமிஷன் ஏஜண்டுகள்' என்பவர்கள் விற்பனை வரிச் சட்டத்தின்படி 'வியாபாரிகள்' (Dealers) ஆக மாட்டார்கள் என்றும்; அவர்கள் 'லைசென்சு' வாங்கிக்கொள்ளாவிட்டாலும் பாதகமில்லை, என்றும் ஒரு தீர்ப்பு அளித்திருந்தனர். (1950 (1) மதராஸ் லா ஜர்னல் 564.)

இப்பொழுது, மூன்று உயர் நீதிபதிகள் அத்தீர்ப்பை ஒப்புக் கொள்ளவில்லை. 'தரகர்' (Broker) என்பவருக்கும் 'கமிஷன் ஏஜண்டு' (Commission Agent) என்பவருக்கும் வித்தியாசம் உண்டென்றும், 'கமிஷன் ஏஜண்டு'கள் விற்பனை வரிச் சட்டப்படி 'வியாபாரி'கள் (Dealers) ஆவார்களென்றும் உயர் நீதிபதிகள் இப்பொழுது அபிப்பிராயப்பட்டிருக்கின்றனர். தரகர் அல்லது புரோகர்—என்பவர், வேறு ஒருவருக்காகப் பேரம் செய்ய நியமிக்கப்படும் ஒரு வகை ஏஜண்டுதான். ஆனல் புரோகரிடம் எவ்விதச் சரக்குகளும் ஒப்படைக்கப்படுவதில்லை. புரோகர் என்பவர் யாருக்காகப் பேரம் செய்கின்ருரோ அவரையும், அவரிடம் சரக்கு வாங்க வேண்டியவர் அல்லது விற்கவேண்டியவரையும் ஒருவருக் கொருவர் அறிமுகப் படுத்தி, அவர்களே ஒருவருக் கொருவர் நேரடியாக ஒப்பந்தம் செய்துகொள்ளும்படி ஏற்பாடு செய்பவர். ஒரு சரக்கை, புரோகர், தம்முடையதென்று விற்பனை செய்யமுடியாது. எனென்ருல் சரக்கின் சுவாதீனமோ பாத்தியமோ, புரோகரிடம் இல்லை. தாம் முடித்துவைத்த ஒரு ஒப்பந்தத்தைக் குறித்து, 'புரோகர்' தாமே தாவா செய்யவும் முடியாது.

'கமிஷன் ஏஜண்டுகள்' அப்படி அல்லர். இவர்களிடம் முதலாளிகள் சரக்குகளையே ஒப்படைத்து விடுகின்றனர். அச்சரக்குகளின் பாத்தியத்தை வேறு எவருக்கும் மாற்றக் கமிஷன் ஏஜண்டுகளுக்குச் சட்டப்படி உரிமை உண்டு. கமிஷன் ஏஜண்டுகளிடம் சரக்கு வாங்குபவர்களுக்கு, அச்சரக்கு யாருடையதென்றே தெரியாமலிருக்கலாம். சரக்குகளின் சுவாதீனமோ அல்லது அவைகளை மாற்றும் பாத்தியமோ கமிஷன் ஏஜண்டுகளிடமேதான் இருக்கிறது. கமிஷன் ஏஜண்டுகள் தங்கள் பெயராலேயே விற்பனை செய்கிருர்கள். சில சமயங்களில் சரக்கு வாங்கியவர் மீது கமிஷன் ஏஜண்டே தாவா செய்யலாம். தம்முடைய ஒவ்வொரு முதலாளிக்கும் தனித் தனிக் கணக்கு வைத்துக்கொள்ள வேண்டுமென்று கமிஷன் ஏஜண்டுகளுக்குக் கட்டாயமில்லை, கமிஷன் ஏஜண்டுகளிடம் வரும் பணங்கள் எல்லாம் அவர்களுடையதே. எல்லா முதலாளிகளின் தொகைகளையும் கமிஷன் ஏஜண்டுகள் சேர்த்துப் புரட்டிக் கொள்வதில் சட்டப்படி தடை இல்லை. அவர் தம்முடைய ஒவ்வொரு முதலாளிக்கும் கொடுக்கவேண்டி தொகைகள் எல்லாம் அவர் சொந்தத்தில் கொடுக்கவேண்டிய கடன் தொகைகளாகவேதான், சட்டத்தில், பாவிக்கப்படும். விற்பனை வரிச் சட்டத்தில் 'விற்பனை' செய்பவர்கள் தங்கள் சொந்தச் சரக்குகளை 'விற்பனை' செய்தால்தான் அதற்கு விற்பனை வரி உண்டு என்ருவது; "வியாபாரி" என்ருல் தம் சொந்தச் சரக்குகளை விற்பனை செய்பவர்தான் என்ருவது நிபந்தனைகள் இல்லை. ஆகையால் 'தரகர்கள்' வியாபாரிகள் இல்லாவிட்டாலும், 'கமிஷன் ஏஜண்டுகள்'—வியாபாரிகளே தான். இவர்கள் விற்பனை வரிச் சட்டப்படி 'லைசென்சு' வாங்கிக்கொள்ளாவிட்டால், விற்பனை வரி கொடுக்க கடமைப் பட்டவர்கள்தான். மேலும் லைசென்சு வாங்கிக் கொண்ட கமிஷன் ஏஜண்டுகள் மகிமை வசூல் செய்தாலும் சரி; இரண்டு தரப்பிலும் கமிஷன் வாங்கிக் கொண்டாலும் சரி; இவர்கள் லைசென்சின் நிபந்தனைகளை மீறிவிட்டதாக ஆகாதென்றும், நீதிபதிகள் அபிப்பிராயப்பட்டு, தீர்ப்பளித்திருக்கின்றனர்.

'கிரய சாசனம்' என்று எழுதப்பட்டாலும் அது அடமானமே. விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டப்படி பரிகாரம் அளிக்கப்பட்டது.

[ஆதாரம்:—1952-ஆல் இந்தியா ரிபோர்ட்டர்—மதராஸ்—11; சென்னை ஹைகோர்ட்; நீதிபதிகள் கனம் கோவிந்த மேனன் அவர்களும் கனம் ராமசாமி அவர்களும்.]

சென்னை விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டப்படி, கடன் கொடுக்கவேண்டிய விவசாயி ஒருவருக்குத் தாம் கொடுக்க வேண்டிய ஒரு குறிப்பிட்ட கடனுக்காக இச்சட்டப்படி என்ன பரிகாரம் கிடைக்கிறதென்று நிச்சயமாகத் தெரியாமலிருந்தாலும் சரி; கடன் கொடுத்தவர் அது விஷயமாகத் தகராறுகள் செய்தாலும் சரி; விவசாயிக்கு அதிகச் செலவில்லாமல் சட்டப்படித் தாம் கொடுக்க வேண்டிய கடனின் அசல் வட்டித் தொகைகள் எவ்வளவு என்று அதிகார பூர்வமாகத் தெரிந்து கொள்ள ஒரு வழி இருக்கிறது. அதாவது அவ்விவசாயி இதற்காகவே கோர்ட்டில் ஒரு மனுப் போட்டுத் தாம் கொடுக்க வேண்டிய கடன் பாக்கி எவ்வளவென்று நிர்ணயம் செய்து கொள்ளலாம். ஆனால் இவ்விதம் மனுப்போடுகிறவர்கள் கடன் கொடுக்க வேண்டியவர்களாக இருக்கவேண்டும். அப்படி இருந்தால்தான் அக்கடனுக்காக அவர் இனி யாதொரு பாக்கியும் கொடுக்க வேண்டியதில்லை என்றோ; அல்லது எவ்வளவு பாக்கி கொடுக்க வேண்டுமென்றோ நிர்ணயம் செய்யக் கோர்ட்டுக்கு அதிகாரம் இருக்கிறது.

இவ்வழக்கின் விவரங்கள் :

1930-இல் இரு சகோதரர்கள் தங்கள் சொத்துக்களை அடமானமாக வைத்து, ரூ. 1500 கடனாக வாங்கினார்கள். அதற்காக ஒரு அடமானப் பத்திரம் எழுதிக் கொடுத்தார்கள். ஆனால் உடனேயே இது சம்பந்தமாகத் தகராறுகள் ஏற்பட்டு விட்டன. பொறுமானமில்லாத சொத்துக்களைத் தமக்கு அடமானமாக வைத்து, தம்மைக் கடன் வாங்கியவர்கள் ஏமாற்றி விட்டதாகக் கடன் கொடுத்தவர் அபிப்பிராயப் பட்டார். அது சம்பந்தமாக ஒரு கிரிமினல் வழக்கும் நடந்தது. அதை எல்லாம் நாம் கவனிக்க வேண்டியதில்லை. அவையெல்லாம் ராஜி செய்யப்பட்டதன் விளைவாக, அடமானம் வைத்துக் கடன் வாங்கிய விவசாயி சகோதரர்கள் கடன் கொடுத்தவருக்கே 9-5-1931-ல் ஒரு 'கிரய சாசனம்' செய்து கொடுத்தார்கள். இக்கிரய சாசனம் ரூ. 1682—8—0-க்கு. இச்சாசனத்தில் கண்ட சொத்துக்கள், அடமானப்பத்திரத்தில் அடங்கிய சொத்துக்களும், வேறு சில சொத்துக்களும். அப்பத்திரத்தில், சாதாரணமாகக் கிரயப் பத்திரங்களில் எழுதப்படும் ஷரத்துக்கள் இருந்ததுடன், வேறு சில ஷரத்துக்களும் இருந்தன. அதாவது:—

"இது முதல் 3 வருடங்களுக்குள், அதாவது 8—5—1934-க்குள், ரூ. 1682—8—0-வும் அதற்கு மாதம் 1-க்கு ரூ. 100-க்கு ரூ. 1-0-0 வீதம் மடக்கு வட்டி கணக்குச் செய்து, கூடுதலாகும் மொத்தத் தொகையில், இது முதல் கிஸ்தி முதலியவை போகப் பாக்கி கிரய சொத்துக்களிலிருந்து வரும் நிகர வருமானத்தைக் கழித்துக் கொண்டு, பாக்கித் தொகையை நாங்கள் தங்களிடம் கொடுத்தால், தாங்கள் இந்த நிலங்களை எங்கள் செலவில் எங்களுக்கு மறு கிரயசாசனம் செய்து கொடுக்க வேண்டியது. இவ்விஷயத்தில் மேலே கண்ட கெடுவே மிக முக்கியமானது" என்று அர்த்தம் ஏற்படும் படியான ஷரத்துக்கள் இருந்தன.

1934-க்குள், இப்பத்திரத்தில் கண்டபடி, நிலத்தை விற்றவர்கள் யாதொரு தொகைகளும் கொடுக்கவில்லை. ஆனால் 1945-இல் அவர்கள் கிருஷ்ணா ஜில்லா கோர்ட்டில் விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டப்படி தாங்கள் கொடுக்க வேண்டிய கடன் பாக்கி எவ்வளவு என்று நிர்ணயம் செய்ய ஒரு மனுப் போட்டனர். தாங்கள் 'விவசாயிகள்' என்றும், 1931-இல் தாங்கள் எழுதிக் கொடுத்த பத்திரமானது 'கிரயம்' அல்ல என்றும் அதுவும் ஒரு 'அடமானமே'தான் ஆகும் என்றும் கண்டு மனுக் கொடுத்தனர். கடன் கொடுத்தவர் அதற்குள் இறந்து போய் விட்டபடியால் அவருடைய மகன்கள் மீது இம்மனுப்போடப் பட்டது. அவர்கள் இம்மனுவை ஆட்சேபித்தனர். 1931-இல் ஏற்பட்டது ஒரு சுத்தக் கிரய சாசனமே ஒழிய 'அடமானம்' அல்ல என்றும்; அதில் ஒரு கெடுக் குறிப்பிடப் பட்டிருந்தும் அதன்படி நிலம் விற்றவர்கள் தொகை கட்டாததனால், மறு சாசனம் வாங்கும் பாத்தியமும் அவர்களுக்கு அற்றுப் போய்விட்டதென்றும், இனி இதில் ஒருவருக்கொருவர் 'கடன்' கொடுக்கவேண்டியது ஒன்றுமில்லையாகையால் 'கடனே' இல்லாமலிருக்கும் போது 'கடன் நிவாரணம்' கிடைக்க மனுப் போடுவது பொருந்தாதென்றும் கட்சியாடினர்.

ஆகையால் 1931இல் ஏற்பட்ட பத்திரமானது, ஒரு சுத்தக் கிரயம் தானா; அல்லது ஒரு அடமானமா, என்ற பிரச்னை ஏற்பட்டது. பத்திரம் எழுதிக்கொண்டவர்கள் அதற்கு என்ன பெயர் கொடுத்திருந்தாலும் அதன் உண்மையான உருவம் என்ன; இது உண்மையில் ஒரு சுத்தக் கிரயப்பத்திரமா? அல்லது உண்மையில் ஒரு அடமானப் பத்திரமாகவே இருந்து வெளித் தோற்றத்திற்கு எக்காரணத்தைக் கொண்டோ ஒரு கிரயப் பத்திரப்போல் பாவனையில் எழுதப்பட்டிருக்கிறதா? அப்படியானால் அப்பத்திரம் எழுதிக் கொடுத்தவர் 'கிரய சொத்துக்கள்' எனப்படும் சொத்துக்களை அடமானமாகவே வைத்துக் கடன் வாங்கியதாகவே சட்டத்தில் ஏற்படும். அப்படி ஏற்பட்டால், 'கிரயம்' எழுதிக் கொடுத்தவர் தொகைகளைக் கொடுத்து, பெந்தகம் அல்லது அடமானம் வைத்தவரைப்போல் தம் சொத்துக்களை மீட்டுக் கொள்ள உரிமை உண்டு. விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டப்படி மனுப் போடவும் உரிமை உண்டு.

இதை எப்படிக் கண்டு பிடிப்பது என்பது பற்றியும் சில விதிகள் இருக்கின்றன. முல்லா என்ற பிரபல சட்ட நூலாசிரியர் எழுதியிருக்கும் புத்தகத்தில், ஒரு பத்திரமானது உண்மையில் கிரயப்பத்திரமா, அல்லது அடமானப் பத்திரமா என்று நிர்ணயம் செய்ய, சில விஷயங்களை ஆராயவேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார். அவையாவன :—(1) கடன் என்பது இருந்துகொண்டே இருக்கிறதா? (2) பணம் கொடுக்க அப்பத்திரத்தில் கெடு கண்டிருக்கிறதா? கெடு குறைவாக இருந்தால் உண்மையில் அது சாசனமாக இருக்கலாம்; கெடு அதிகமாக இருந்தால் அது அடமானத்திற்குத்தான் பொருந்தும். (3) நிலம் விற்றவரே சுவாதீனத்தில் இருப்பது அடமானத்திற்குத்தான் பொருந்தும். (4) பணம் கொடுக்கும்போது வட்டியும் கொடுக்கவேண்டுமென்று கண்டிருந்தால் அது அடமானம் என்று ஊகிக்கலாம். (5) பத்திரத்தில் கண்ட விலை அச்சொத்தின் உண்மை விலைக்குக் குறைவாகவே இருந்தால், அது அடமானம் என்று ஊகிக்கலாம். (6) பத்திரம் ஏற்படும் போதே அதைத் திருப்ப வாங்குவதற்கான உடன்படிக்கையும் ஏற்பட்டிருந்தால் அது அடமானத்துக்கே பொருந்தலாம். சொத்தைத் திருப்ப வாங்குவதைப் பற்றிய உடன்படிக்கையானது சில காலம் கழித்து ஏற்பட்டிருந்தால், அது உண்மைச் சாசனத்திற்குத்தான் பொருந்தும் — என்று சில முக்கிய சோதனைகளை முல்லா தம் புத்தகத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

பிரஸ்தாப வழக்கில் முதலில் அடமானம் ஏற்பட்ட ஒரு வருடத்திற்குள் தகராறுகள் ஏற்பட்டு இக்கிரயப்பத்திரம் எழுதப்பட்டிருக்கிறது. கிரயப்பத்திரத்தில் கண்ட தொகையானது முதல் அடமானத் தொகையும் அதன் வட்டியுமே. ஆனால் அதே தொகைக்கு அதிக சொத்துக்கள் கிரயப் பத்திரத்தில் கண்டிருக்கின்றன. 1931 சாசனத்திற்கு ஸ்டாம்பு வாங்கி இருப்பது கிரயம் செய்தவர்களே. (உண்மைச் சாசனமாக இருந்தால் கிரயம் வாங்குபவர் தான் ஸ்டாம்பு வாங்குவார்.) பணம் திருப்பிக் கொடுக்க வட்டி கண்டிருக்கிறது. வருமான விஷயமாகக் கணக்குகள் எடுக்கவேண்டுமென்று இருக்கிறது. பத்திரம் எழுதிக்கொடுத்தவர்களேதான் சொத்துக்களையும் சுவாதீனம் வைத்திருப்பதாகவும் தஸ்தவேஜுகள் தாகல் செய்யப்பட்டன. (ஆனால் இது விஷயத்தில் நீதிபதிகள் யாதொரு அபிப்பிராயமும் சொல்ல முடியவில்லை.) இவ்விஷயங்களை ஆதாரமாக வைத்துக்கொண்டு கிரயப் பத்திரம் என்று எழுதிக் கொடுத்தவர்கள் அடமானப் பத்திரம் தான் உண்மையில் எழுதிக் கொடுத்தனர் என்றும்; ஆகையால் அவர்கள் கொடுக்கவேண்டியது 'கடன்' தான் என்றும்; அது எவ்வளவு என்று நிர்ணயம் செய்துகொள்ள அவர்கள் "விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டப்படி" மனுப்போட உரிமை உள்ளவர்கள்தான் என்றும் ஜில்லா ஜட்ஜ் தீர்ப்பளித்தார்.

அத்தீர்ப்பின் பேரில் சென்னை ஹைகோர்ட்டில் கொடுக்கப்பட்ட அப்பீலிலும் ஜில்லா ஜட்ஜின் தீர்ப்பே உறுதி செய்யப்பட்டது.

ஹைகோர்ட்டில் ஏற்பட்ட அப்பீலில் இரண்டு பிரச்னைகள் வாதாடப்பட்டன. ஒன்றுதான் மேலே விளக்கப்பட்ட பிரச்னை. அதாவது, ஒரு பத்திரம் உண்மையில் கிரய பத்திரமா அல்லது அடமானப் பத்திரமா என்று நிர்ணயம் செய்வதுபற்றி. மற்றொரு பிரச்னை அரசியல் பிரச்னை. 'சென்னை விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டம்' அரசியல் அமைப்புச் சட்டத்தில் கண்ட சில ஜீவாதார உரிமைகளுக்கு முரணாக இருப்பதால் அச்சட்டமே செல்லாதெனவும் வாதாடப்பட்டது. இக்கட்சியையும் நீதிபதிகள் ஒப்புக் கொள்ளவில்லை. அப்பிரச்னை சம்பந்தமாய்ப் பின்பு அவசியமானால் பிரத்தியேகமாக விளக்கம் செய்யப்படும்.

அடகு நகைகள் திருட்டுப் போயின. இருந்தாலும் கடன் தொகையை வசூல் செய்யத் தாவா.

[ஆதாரம்:—1952 ஆல் இந்தியா ரிபோர்ட்டர்—நாகபுரி—8. நாகபுரி ஹைகோர்ட்.]

தம்முடைய தங்க நகைகளை ஈடாக வைத்து, அதன் பேரில் ஒருவர் ரூபாய் 750 கடன் வாங்கினர். கடன் கொடுத்தவர் தருக்த மனிதர்தான். ஒரு பென்ஷன் ஜில்லா ஜட்ஜ். ஆனல் அவரிடமிருந்த இந்த அடகு நகைகள் திருட்டுப் போயின. இந்த நகைகள் மட்டுமல்ல. இத்துடன் அவர் வைத்திருந்த ரூபாய் 16,000 பொறுமானமுள்ள தம் சொந்த நகைகளையும், கடன் கொடுத்தவர், அத்திருட்டில் இழந்தார். இதில் ஒன்றும் சந்தேகமில்லை. அடகு நகைகள் திருட்டுப் போய் விட்டாலும், தாம் கொடுத்த கடன் தொகையை வசூல் செய்யத் தமக்கு உரிமை இருப்பதாக அவர் கடன் வாங்கியவர்மீது அதற்காகக் கோர்ட்டில் தாவா செய்தார். நகைகள் கெட்டுப் போய்விட்டாலும், கடன் தொகையை திருப்பிக் கொடுக்கக் கடன் வாங்கியவர் கடமைப்பட்டவர்தான் என்று முதல் கோர்ட் அவர் மீது டிக்ரி செய்தது. அத்தீர்ப்பைப் பரிசீலனை செய்யவேண்டுமென்று கடன் வாங்கியவர் நாகபுரி ஹைகோர்ட்டுக்கு மனுச் செய்தார். அடகு பிடித்தவர் ஈட்டுச் சாமானைத் திருப்பிக்கொடுக்காமல், தாம் கொடுத்த கடனை மட்டில் வசூல் செய்ய முடியுமா? சட்டம் என்ன?

இதற்கான சட்டம் இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் (Indian Contract Act) 151, 153 ஷரத்துக்களில் அடங்கி இருக்கிறது. அதாவது:—வேறு ஒருவருடைய சாமான்களை அடகு அல்லது ஈடாக வைத்துக்கொள்ள ஒப்புக்கொண்டவர், அவைகளை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளவேண்டும்; அதே மாதிரி சந்தர்ப்பங்களில், சாதாரணமான பொறுப்பு வாய்ந்த ஒருவர் அதே எடை, ரகம் மதிப்புமுள்ள தம் சொந்தச் சாமான்களை எவ்விதமான ஜாக்கிரதையுடன் பார்த்துக் கொள்ளுவாரோ, அதே ஜாக்கிரதையுடன் அடகு பிடித்தவரும் அடகுச் சாமான்களைப் பாதுகாக்கக் கடமைப்பட்டவர். இதற்குமேல் அதிக ஜாக்கிரதை தேவையில்லை. ஆனல் அவ்வித ஜாக்கிரதைக்குக் குறையக் கூடாது. இவ்வித ஜாக்கிரதையுடன் இருந்தபோதும், அடகுச் சாமான்கள் காணாமல்போனாலும், அழிந்து போனாலும், குறைந்துபோனாலும், அதற்கு அடகு பிடித்தவர் ஜவாப்தாரி அல்ல. அச்சந்தர்ப்பங்களில், அடகுச் சாமான்களின் சொந்தக்காரருக்குத்தான் நஷ்டம். ஏனென்றால் அவருடைய சாமான்கள் தான் போய்விட்டன. அடகுச் சாமான்கள் போய்விட்டாலும் அவர் வாங்கிய கடன் அவரை விடாது. வாங்கிய கடனையும் வட்டியையும் அவர் திருப்பக் கொடுத்துத்தான் விடவேண்டும். 'அடகுச் சாமான்களைத் திருப்பிக் கொடுத்தால்தான் நான் கடன் வாங்கியதையும் திருப்பித் தருவேன்'—என்று இச்சந்தர்ப்பத்தில் கடன் வாங்கியவர் சொல்ல முடியாது.

ஆனல் இதெல்லாம் அடகுச் சாமான்களை வைத்திருப்பவர் சட்டப்படிக்கான ஜாக்கிரதையுடன் இருந்திருந்தால்தான். அப்படி அவர் இல்லாவிட்டால், சட்டம் வேறு. அவருடைய ஜாக்கிரதைக் குறைவினல், அடகுச் சாமான்கள் கெட்டுப் போயிருந்தால், அந்த நஷ்டத்தை அவர்தான் ஈடுசெய்யவேண்டும். ஆகையால் இவ்விதமான சந்தர்ப்பங்களில் கவனிக்க வேண்டியது ஒரே விஷயம்தான். அதாவது பிறருடைய சாமான்களை அடகாகவோ வேறு முறையிலோ வைத்திருப்பவர்கள் எவ்வித ஜாக்கிரதையுடன் இருந்து அவைகளைப் பாதுகாத்து வந்தனர் என்பதுதான்.

பிரஸ்தாப வழக்கைக் கவனித்தால் இது சம்பந்தமான சட்டம் நன்ருக விளங்கும். நகைகளை ஈடாகப் பெற்று வைத்திருந்தவர், அவைகளையும் அவைகளைவிட அதிக விலையுள்ள தம் சொந்த நகைகளையும் திருட்டுக்கும் நெருப்புக்கும் பயமில்லாமல் செய்யப்பட்டிருந்த, ஒரு 'காட்ரெட்ஜ்' இரும்புப் பெட்டியில்தான் வைத்திருந்தார். அந்த இரும்புப் பெட்டியைப் பூட்டி அதன் சாவியை வேறு ஒரு ரொக்கப் பெட்டியில் வைத்திருந்தார். அந்த ரொக்கப் பெட்டியின் சாவியை மட்டில் தம்முடன் வைத்திருந்தார். இரண்டு பெட்டிகளும் ஒரே அறையில் தான் இருந்தன. அந்த அறையும் பூட்டப்பட்டிருந்தது. அறையைப் பூட்டிக்கொண்டு அவர் வேறு ஊருக்குப்போன போதுதான் திருட்டு நடந்தது. அறை இருந்தது கீழே. மாடியில் தான் அவருடைய குடும்பத்தினர் இருந்தனர். காவலாட்கள் ஒருவரும் இல்லை; இரும்புப் பெட்டியைத்தான் தூக்க முடியாதே ஒழிய அதன் சாவி இருந்த ரொக்கப் பெட்டியை யாரும் தூக்கிக்கொண்டு போகலாம். அப்பெட்டியில்தான் இரும்புப் பெட்டியின் சாவி

இருந்தது என்பதைக் கவனிக்கவும். ஆகையால் அடகு நகைகள் இரும்புப் பெட்டியிலிருந்தாலும் அதன் சாவியானது பக்கத்திலேயே பந்தோபஸ்தில்லாமல் வைக்கப்பட்டிருந்தது.

சாதாரண ஜாக்கிரதை உள்ள மனிதர் இப்படிச் செய்யமாட்டார். திருடர்கள் வந்து மூதவில் ரொக்கப் பெட்டியிலுள்ள சாவியை இலகுவாய் எடுத்து, அதைக்கொண்டு இரும்புப் பெட்டியைத் திறந்து நகைகளைத் திருடிப்போய் விட்டனரென்று தெரிந்தது. நல்ல இரும்புப் பெட்டியில் நகைகளை வைத்தது மட்டில் போதாது. அதன் சாவியை அவர் ஜாக்கிரதையாக வைக்கவில்லை. அறை பூட்டப்பட்டிருப்பதாலும் அதன் கதவை எவரும் நெம்பித் திறந்து விடும்படியாக் இருந்தது. திருடர்களும் அப்படியேதான் செய்தனர். ஆகையால் சட்டப்படிக்கான ஜாக்கிரதையுடன் அவர் அடகு நகைகளைப் பாதுகாக்கவில்லை. அதனால் ஏற்பட்ட நஷ்டத்திற்கு அவரேதான் ஜவாப்தாரி ஆவார் என்று நீதிபதி அவர்கள் அபிப்பிராயப்பட்டு, அடகு நகைகள் தாவா தேதியன்று என்ன பொறுமானமுள்ளனவோ, அத்தொகையைக் கடன் தொகையிலிருந்து அவர் கழித்துக்கொள்ள வேண்டுமென்று தீர்ப்பளித்தனர். அடகு நகைகளுடன் தம் சொந்த நகைகளை அவர் இழந்திருந்தாலும் அதை இவ்விஷயத்தில் கவனிக்கவேண்டிய அவசியமில்லை என்றும் நீதிபதி அவர்கள் அபிப்பிராயப்பட்டனர்.

உ

முற்று மாசரிமை மூவாது ஈம் மனோர் பெற்று சுகவாழ்வு பெற டைக—மற்றும் வளம்பெருக வான் சொரிய மன்பதைகள் ஒக்க அளவின்றி பல்க அறம்.

ஸ்ரீ மஹாலக்ஷ்மி தேவி அனுக்கிரஹத்தால்

"ஆருடத்தின் மஹிமை"

உங்கள் எதிர்காலத்தைப் பற்றி பூரா ஜாதக நகலுடன் அல்லது கடிதம் எழுதும் நேரத்துடன் நியாயமான 7 கேள்விகள் எழுதி ரூ. 2/- அனுப்பினால் உங்கள் எதிர்கால உண்மைச் செய்தி உங்களை விரைவில் தேடிவந்தடையும்.

1952-ம் வருஷ மாதவாரி பலாபலன்
குணதிசய பலன் ஆயுள் பூராவும்

பலாபலன் வேண்டியவர்கள் பூரா ஜாதக நகலுடன் அல்லது ஜனன கால வருஷம், மாதம், தேதி அல்லது சுமார் வயதுடன் எழுதி ரூ. 3/- மணியார்டர் அனுப்பினால் மேற்கண்ட பலாபலன் மறு தபாலில் எழுதி யனுப்பப்படும்.

திசா புக்தி பலன்

எந்தத் திசையானாலும், எத்தனை வருஷ திசையானாலும், திசை பூராவிற்கும் 9 புக்திக்கும் விபரமாய் பலாபலன் எழுதி யனுப்பப்படும். தேவையுள்ளவர்கள் பூரா ஜாதக நகலுடன் ரூ. 10/- மணியார்டர் மூலம் அனுப்பவும்.

N.B:-வெளிநாட்டு நேயர்கள் இரட்டிப்புத் தொகைக்கு பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர் வாங்கி யனுப்பவும்

★ ★

ஸ்ரீ மஹாலக்ஷ்மி ஜியோதிஷ ஆபீஸ், கோட்டமருதூர் - அரகண்டநல்லூர் P.O. தெ. ஆ. ஜில்லா

இப்பகுதியில் நமது வாசகர்கள் கேட்கும் சட்ட சம்பந்தமான கேள்விகளுக்கு மட்டில் பத்திரிகையில் இடமிருக்கும் வரை பதில் அளிக்கப்படும். கேள்வி கேட்பவர்கள் தங்கள் சொந்த விவகாரங்களைப்பற்றி எழுதக்கூடாது. சட்டங்களிலோ, விதிகளிலோ ஏற்படக்கூடிய சந்தேகங்களைத் தெளிவுபடுத்திக்கொள்ளும் முறையில்தான் கேள்விகள் இருக்கவேண்டும். கேள்விகள் சுருக்கமாய் இருக்கவேண்டும். ஒவ்வொரு கேள்வியிலும் குறிப்பிடப்பட்டிருக்கும் சந்தர்ப்பங்களுக்கு மட்டில்தான், அதன் 'பதில்' பொருந்தும். கேள்விகளுக்குச் சொல்லப்படும் பதில் அபிப்பிராயமே.

29. கேள்வி: (ரத்தினசபாபதி - சிதம்பரம்) ஒரு கடையில் 'ஷாப் ஆக்ட்'படி வேலை பார்த்தவர்களில் சிலருக்கு அவரவர்களுக்குச் சேர வேண்டிய சம்பளமும், ஒரு மாத நோட்டீசுக்குப் பதிலாக ஒரு மாதச் சம்பளமும் லீவு நாட்களுக்குள்ள சம்பளமும் கொடுத்து அவர்களைக் கடையை விட்டு நீக்கப்பட்டது. பின்பு டையார்களை J. G. ரிஜிஸ்டரிலும் மற்ற ரிகார்டுகளிலும் பதிவு செய்யாமல், இவ்வளவு வேலைக்கு இவ்வளவுதான் கூலி என்ற 'காண்ட்ராக்'டின் பேரில் அவர்கள் இஷ்டப்பட்ட காலத்தில் வேலை செய்து போகும்படி நடத்தி வந்தால் ஷாப் சட்டம் பாதிக்குமா?

பதில்: ஷாப் சட்டத்தில் 'சிப்பந்தி' அல்லது வேலை பார்ப்பவர் (Person employed) என்றால் ஒரு கடை சம்பந்தப்பட்ட வரையில் அக்கடையில் காரியங்களுக்காகவே முற்றிலுமோ முக்கியமாகவோ அமர்த்திக் கொள்ளப்படும் எவரையும் குறிக்கும். அவர்களுக்குச் சம்பளம் வேலைக்குத் தகுந்தபடி கொடுக்கப்பட்டாலும் நடத்தைக்குத் தக்கபடி கொடுக்கப்பட்டாலும் வேறு முறைப்படி கொடுக்கப்பட்டாலும் அவர்கள் அக்கடையின் 'சிப்பந்தி'களே ஆவார்கள். இவர்களுக்கும் ஷாப் சட்டம் உண்டு.

30. கேள்வி: ஒரு ஸ்தாபனத்தில் வேலை செய்யும் ஒருவர் திருடிவிட்டு, ஷாப் ஆக்ட் ஆபீசரிடம் தான் திருடியது உண்மை என்று ஒப்புக்கொண்டு, அவரிடம் ஸ்டேட்மெண்ட்டும் எழுதிக் கொடுத்திருந்து அந்த ஸ்டேட்மென்டுக்கு நகல் வேண்டுமென்று முதலாளி கேட்டால், ஆபீசர் நகல் கொடுக்க மறுக்கலாமா?

பதில்: ஆபீசர் நகல் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறார். (ருசுச் சட்டம் — Evidence Act—செக்ஷன் 74—76) ஆனால் இவ்வித ஸ்டேட்மெண்டுகளை ஆபீசர்கள் வாங்குவது சரியா, என்பதைப் பற்றிச் சமீபத்தில் சென்னை ஹைகோர்ட்டில் ஒரு தீர்ப்பு ஏற்பட்டிருக்கிறது. "வக்கீல்" 1952 பிப்ரவரி மாத இதழ் "வழக்கும் தீர்ப்பும்" என்ற தலைப்பில் "வரம்பு மீறிய விற்பனை வரி அதிகாரி" என்ற வழக்கைப் படிக்கவும்.

31. கேள்வி: (கலியாணப்ப செட்டியார்— பண்ருட்டி) பொதுவாக ஒரு குமாஸ்தாவுக்கு மாதத்திற்கு, சட்ட பாதிப்பு இல்லாமல், எத்தனை நாள் லீவு கொடுக்க வேண்டும்?

பதில்: ஷாப் சட்டப்படி (1) கடை அல்லது வேறு ஸ்தாபனத்தில் வேலை செய்யும் சிப்பந்திக்கு ஒரு வாரத்தில் ஒரு நாள் சம்பளத்துடன் விடுமுறை கொடுக்கவேண்டும். (வாரத்தில் ஒரு நாள் கடைகள் மூடப்பட வேண்டும். கடையில் வேலை செய்யும் சிப்பந்திக்கு இதுவேதான் வார விடுமுறை நாள்) (2) இது தவிர, ஒரு ஸ்தாபனத்தில் 12 மாதங்கள் தொடர்ந்து வேலையில் அமர்ந்திருந்த ஒரு சிப்பந்தி அடுத்த வருடத்தில் 12 நாட்கள் தம் இஷ்டப்படி 'பிரிவிலேஜ் லீவு' எடுத்துக் கொள்ளலாம். இந்த லீவு நாட்களை 24 நாட்கள் ஆகும் வரை சிப்பந்தி சேர்த்துவைக்கலாம்

இந்த லீவு நாட்களுக்கு அவருக்குச் சம்பளம் உண்டு. தாம் இஷ்டப்பட்ட மாதத்தில் இந்த லீவை எடுத்துக் கொள்ளலாம். (3) சிப்பந்தி வேலைக்கு வந்து 12 மாதங்கள் ஆனாலும் ஆகாவிட்டாலும், அவருக்கு நோய் அல்லது விபத்து ஏற்பட்டால் வருடத்தில் 12 நாள் வரை சம்பளத்துடன் லீவு எடுத்துக் கொள்ளலாம். (4) அதேபோல் வருஷத்தில் தகுந்த காரணங்களின் பேரில் ஒரு சிப்பந்தி 12 நாட்கள் வரை சம்பளத்துடன் காஷுவல் லீவு எடுத்துக் கொள்ளலாம். மேற்கண்ட 4 வகை லீவு நாட்களுக்கும் சம்பளம் உண்டு. ஒரு சிப்பந்தி இதற்கும் அதிகமான நாட்கள் லீவு எடுத்துக் கொள்ள வேண்டுமானால் அவருக்கு அந்நாட்களுக்குச் சம்பளம் இல்லை.

32. கேள்வி: (அங்கமுத்து முதலியார்—ஈரோடு) ஒரு வியாபாரி ஒரே விலாசத்தில் கைநெசவு ஜவுளி மொத்த வியாபாரமும், விசைத்தறி நெசவு (Power loom) ஜவுளி மொத்த வியாபாரமும் செய்யலாமா? எந்த முறையில் கணக்கு வைத்துக் கொண்டால் கைத்தறி நெசவு மொத்த விற்பனைத் தொகைக்கு விற்பனைவரி கிடையாது?

பதில்: இரண்டும் செய்யலாம். ஆனால், கைத்தறி ஜவுளி வியாபாரத்திற்கு கெடுப்படி லைசென்சு வாங்கிக்கொண்டு கெடுப்படி அதைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டும். இதற்குத் தனியான கணக்குகள் வைத்துக் கொள்ள வேண்டும். லைசென்சில் கண்ட எந்த நிபந்தனையையும் மீறக்கூடாது. இவ்விதம் இருந்தால் கைத்தறி ஜவுளி மொத்த வியாபாரத்திற்கு விற்பனை வரி கிடையாது.

33. கேள்வி: (நடேசன் செட்டியார்—இராமச்சந்திரபுரம்) இந்தியாவில் ஒருவர் பேரில் வியாஜ்யம் தொடர்ந்து டிக்ரி ஏற்பட்டிருக்கிறது. பிரதிவாதிக்கு இந்தியாவில் ஸ்தாவர ஜங்கம சொத்துக்கள் கிடையாது. பர்மா, மலேயாவில் ஏராளமான சொத்து இருக்கிறது. இந்த டிக்ரியை, பர்மா அல்லது மலேயாவில் நிறைவேற்றலாமா? நிறைவேற்றக் கூடாதென்றால் ஏன்?

பதில்: ஒவ்வொருதேசத்திலும் அந்தந்தத் தேசத்தின் சட்டங்கள்தான் செல்லும். இந்திய சிவில் வழக்கு முறைச் சட்டப்படி, இந்தியக் கோர்ட்டுகளின் டிக்ரிகளைத்தான் இந்தியக் கோர்ட்டுகள் நிறைவேற்றும். அதேபோல் பர்மாவில் அவர்களுடைய கோர்ட்டில் ஏற்பட்ட டிக்ரிகளைத்தான் பர்மா கோர்ட்டுகள் நிறைவேற்றும். மலேயாவும் அதைப்போலவே தான். ஒரு நாட்டில் டிக்ரி பெற்றவர் வேறு நாட்டில் அந்த டிக்ரியையே ஆதாரமாக வைத்து அங்கே புதிய டிக்ரி வாங்கிக் கொண்டு அதை அங்கேயே நிறைவேற்றலாம். இது பொதுவான விதி. பல விதி விலக்குகள் இருக்கின்றன. இரண்டு ராஜ்யங்கள் ஒப்பந்தம் செய்து கொண்டு ஒரு நாட்டில் ஏற்பட்ட டிக்ரியை மற்றவர் கோர்ட்டில் நிறைவேற்றலாம்.

34. கேள்வி: (ஷண்முகம்—திருச்சி) ஒரு கடையில் இருக்கும் தொழிலாளி அக்கடையிலுள்ள சகல பொறுப்புகளையும் தாமே கவனித்து வருகிறார். முதலாளி கடைக்கு வருவதில்லை. இவ்வாறு தொடர்ந்த ஐந்து வருடங்களானபின் அத்தொழிலாளி கடைசி சமயத்தில் தமக்கு ஒரு பாகம் கொடுக்கும்படி கேட்டால், பாகம் கொடுக்க முதலாளிக்கு உரிமை உண்டா?

பதில்: முதலாளி இஷ்டப்பட்டால் பாகம் கொடுக்கலாம். அதற்கு 'உரிமை' உண்டு. ஆனால் கட்டாயமாக அத்தொழிலாளிக்குப் பாகம் கொடுக்க வேண்டுமென்று சட்டப்படி 'கடமை' இல்லை. 'உரிமை' வேறு; 'கடமை' வேறு. ஒரு காரியத்தைச் செய்ய உங்களுக்கு 'உரிமை' இருந்தால் அதை நீங்கள் செய்தாலும் செய்யலாம்; செய்யாவிட்டாலும் பாதகமில்லை; உங்கள் இஷ்டம். ஆனால் ஒரு காரியத்தைச் செய்ய நீங்கள் 'கடமை'ப்பட்டிருந்தால் நீங்கள் இஷ்டப்பட்டாலும் இஷ்டப்படாவிட்டாலும் அதைச் செய்ய வேண்டும். செய்யாவிட்டால் சட்டம் அதைச் செய்யும்படி வற்புறுத்தும். உங்கள் மணி பர்சிலிருக்கும் உங்களுடைய பணத்தில் ரூ. 100 எடுத்து நீங்கள் யாருக்கும் கொடுக்க உங்களுக்கு 'உரிமை' உண்டு. ஆனால் நீங்கள் பிராமிசரி நோட்டின் மீது கடன் வாங்கிய ரூ. 100ஐத் திருப்பிக் கொடுக்க வேண்டியது உங்கள் 'கடமை.'

35. கேள்வி: (நாராயணசாமி செட்டியார்—பிரஹம்பி) சென்னைச் சட்டசபை தேர்தலுக்கு நிற்பவர் என்னென்ன செலவுகள் செய்யலாம்; பார்லிமெண்டுக்கு நிற்பவர்கள் என்னென்ன செலவுகள் செய்யலாம் என்பதைப் பற்றிச் சட்டம் என்ன?

பதில்: ஒரு அபேட்சகர் தேர்தலுக்காக என்ன என்ன செலவுகள் செய்யலாம் என்று சட்டத்தில் வியக்தமாக இல்லை. ஆனால் சில செலவுகள் செய்வது குற்றமாகும். உதாரணமாக—"வோட்டர்"களுக்கு லஞ்சம் கொடுப்பது குற்றம். லஞ்சம் கொடுத்து ஜயித்தவருடைய

தேர்தலும் ரத்தாகி விடும். (தேர்தல் வழக்கு ஏற்பட்டு அதில் ருசுவானால்தான்!) தேர்தலுக்கு அபேட்சகராக நியமனத்தாள் தாகல் செய்த ஒவ்வொரு அபேட்சகரும் - அவர் ஜயித்தவராக இருந்தாலும் சரி, தோற்றவராக இருந்தாலும் சரி, வாபஸ் வாங்கிக் கொண்டவராக இருந்தாலும் சரி, தேர்தல் விதிகளின்படி தேர்தல் கணக்குகளை, தேர்தல் முடிவானது கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட்ட தேதியிலிருந்து 45 நாட்களுக்குள், ரிடர்னிங் ஆபீசருக்கு அனுப்ப வேண்டும். தேர்தல் கணக்குகள் நமூனா 26இன்படி இருக்க வேண்டும். ரூ. 5-க்கு மேற்பட்ட ஒவ்வொரு செலவுக்கும் சாதாரணமாய் வவுசர் அனுப்ப வேண்டும். செலவு கணக்குகள் தனித்தனிப் பாகமாக இருக்க வேண்டும். (a) சொந்தச் செலவுகள், ஹோட்டல் செலவுகள், பிரயாணச் செலவுகள், தேர்தல் சம்பந்தமான பிரசுரங்கள் வாங்கச் செலவுகள் (b) தேர்தல் ஏஜண்டுகள், குமாஸ்தாக்கள், சிப்பந்திகளுடைய சம்பளம் (c) இவர்களுக்காகப் பிரயாணச் செலவு, சாப்பாட்டுச் செலவுகள் (d) மற்றவர்களுடைய பிரயாணச் செலவுகள் (e) அச்சுக்கூலி (f) விளம்பரச் செலவுகள் (g) ஸ்டேஷனரி சாமான்கள் வாங்கியது (h) தபால் தந்திச் செலவுகள் (i) மீட்டிங் ரூம், ஆபீஸ் வாடகைச் செலவுகள் (j) தகருர் இருந்து இன்னும் கொடுக்கப் படாமல் இருக்கும் இனங்கள் (k) மேலே கண்டவை தவிர தேர்தல் சம்பந்தமான மற்றச் செலவுகள் (l) மொத்த கோஷ்பாரா. இதிலிருந்து எந்த எந்தச் செலவுகள் செய்யலாமென்று ஊகித்துக் கொள்ளலாம். ஆனால் எவ்வளவு தொகைக்கு மேல் செலவு செய்யக்கூடாதென்ற விதி மட்டில் இருக்கிறது. கணக்கு அனுப்பவேண்டியவர்கள் விதிகளை நன்றாகக் கவனித்து அவைகளின்படி அனுப்புவது அவசியமாகும்.

36. கேள்வி: (அப்துல்கரீம்—விளாம்பட்டி) முஸ்லீம்கள் எந்த வயதிற்குள் கவர்ண்மெண்டு உத்தியோகம் பெறவேண்டும்?

பதில்: இப்பொழுது ஷெடியூல் ஜாதியினரைத் தவிர மற்ற எல்லா இந்தியர்களுக்கும் ஒரே மாதிரி விதிகள்தான். முஸ்லீம்களுக்கென்று தனி விதிகள் கிடையாது. அப்படி இருந்தாலும் அவை செல்லா. கவர்ண்மெண்டில் எவ்வளவோ இலாகாக்கள் இருக்கின்றன. ஒவ்வொரு இலாகாவிலும் உத்தியோகம் பெறுவதற்கான வயது, யோக்கியதாம்சங்கள் பற்றிய தனித்தனி விதிகள் இருக்கின்றன.

37. கேள்வி: (முத்தய்யா — பன்ருட்டி) (a) ஒரு வியாபாரியால் சர்க்காருக்குக் கொடுக்கப்படும் 'கஸ்டம்ஸ் டியூடி' வரியை விற்பனை வரிச் சட்டப்படி மொத்த வியாபாரத் தொகையில் கழித்துக் கொள்ளலாமா? (b) ஒரு வியாபாரி தம்மிடம் சரக்கு வாங்குபவர்களிடம் விற்பனை வரிச் சட்டப்படி வசூல் செய்யும் விற்பனை வரித் தொகைக்கும் விற்பனை வரி கொடுக்க வேண்டுமா?

பதில்: (a) 'கஸ்டம்ஸ் டியூடி'யை (Customs Duty) மொத்த வியாபாரத் தொகையில் கழித்துக்கொள்ளச் சட்டமில்லை. எக்சைஸ் டியூடியை (Excise Duty) மட்டில் கழித்துக் கொள்ளலாம். டர்ன்ஓவர் விதி 5 (1) (i) பார்க்கவும். (b) வியாபாரி வசூல் செய்யும் விற்பனை வரியும் மொத்த வியாபாரத்தில் (Turnover) சேர்ந்திருப்பதால், இதற்கும் விற்பனை வரி உண்டு.

38. கேள்வி: (சுப்பிரமணிய அய்யர் — அரகண்டநல்லூர்.) ஒரு வீட்டை வாடகைக்கு ஒப்புக்கொண்டிருப்பவர் சட்டப்படி அவ்வீட்டிற்கான வீட்டு வரியைக் கட்டவேண்டுமா? அப்படிக் கட்டினால் அதை வாடகையில் ஈடுசெய்து கொள்ள முடியுமா?

பதில்: இது வீட்டின் சொந்தக்காரரும் வாடகைக்காரரும் செய்துகொண்ட ஒப்பந்தம் அல்லது ஏற்பாட்டைப் பொறுத்தது. இது சம்பந்தமாக யாதொரு ஒப்பந்தமும் இல்லாவிட்டால், வீட்டு வரியைச் சொந்தக்காரர்தான் கட்டவேண்டும். ஆனால் இவ்வரியை, வாடகைதாரிடமிருந்து வசூல் செய்யவும் சட்டங்கள் இருப்பதால் அவ்விதம் வாடகைதாரிடமிருந்து வசூல் செய்யப்பட்ட வரித் தொகைகளை அவர் கொடுக்கவேண்டிய வாடகையிலிருந்து ஈடு செய்து கொள்ளச் சட்டம் இடங்கொடுக்கும். வாடகைதார், தாமாகவே இவ்வரிகளைக் கொடுத்தாலும் வாடகையில் ஈடுசெய்துகொள்ளலாம். (உதாரணமாக டிஸ்டிரிக்ட் முனிசிபல் சட்டம் செக்ஷன் 332 — பார்க்கவும்.)

39. கேள்வி: (கோவிந்த செட்டி—கிருஷ்ணகிரி.) ஒருவர் கடை வைத்து மூன்று வருடங்களாகப் பிரதி ஏப்ரல் மாதம் ரூ. 6 செலுத்தி 'லைசென்சு' பெற்று வருகிறார். அவருக்குப் பிரதி வருடம் மொத்த விற்பனை ரூ. 7000-க்கு மேற்படவில்லை. இதுவரை அவர் எந்த விதக் கணக்கும் விற்பனை வரி ஆபீசுக்கு அனுப்பவில்லை. இந்நிலையில் டையார் எந்தக் குற்றத்திற்கு ஆளாவார்? விற்பனை

ரூ. 7000-க்குள் இருந்தாலும், 'லைசென்சு' பெற்றதால், அவர் செய்த விற்பனைக்கு வரி செலுத்தவேண்டுமா?

பதில்: 'லைசென்சு' என்ற சொல் சரியல்ல. விற்பனை வரிச் சட்டத்தின் செக்ஷன் 8-A-இன்படி 'ரிஜிஸ்டர்' அல்லது பதிவு செய்து கொண்ட வியாபாரிகளுக்கும் (Registered dealer) ஒரு வருடத்தில் மொத்த வியாபாரம் ரூ. 10,000 அல்லது அதற்குமேல் இருந்தால் தான், விற்பனை வரி விதிக்கப்படும். ஆனால் ரிஜிஸ்டர் செய்துகொண்ட வியாபாரிகள், தங்களிடம் சரக்கு வாங்குபவர்களிடமிருந்து விற்பனை வரி வசூல் செய்திருந்தால் அவ்வரியைச் சர்க்காருக்குக் கட்டிவிட வேண்டும். கட்டாமலிருப்பது குற்றமாகும். மேலும் ரிஜிஸ்டர் செய்துகொண்ட வியாபாரிகள் விற்பனை வரிச் சட்டத்தின் செக்ஷன் 13-இன்படி சரிவர கணக்குகள் வைத்துக் கொள்ளவேண்டும்.

40. **கேள்வி:** (கணேசன் — கல்லுப்பட்டி.) ஒரு இந்துவுக்குப் பூர்வீகச் சொத்துக்கள் உண்டு. அவருக்கு ஒரு மகனும் இரண்டு பெண் மக்களும உண்டு. தகப்பன், மகன் இருவரும் இறந்துவிட்டார்கள். மகனுக்கு ஒரு மகள் மட்டில் உண்டு; மனைவி இல்லை. சொத்துக்கள் யாரைச் சேரும் — தகப்பனுடைய இரண்டு பெண் மக்களுக்கா; அல்லது மகனுடைய மகளுக்கா?

பதில்: முதலில் இறந்தது யார்? தகப்பன் இறந்த பிறகு மகன் இறந்திருந்தால், சொத்துக்கள் மகனுக்கு வந்து மகன் இறந்தபிறகு மகனுடைய மகளைச் சேரும். அப்படியில்லாமல் மகன் இறந்த பிறகு தகப்பன் இறந்திருந்தால், சொத்துக்கள் அவருடைய இரண்டு பெண் மக்களையும் சேரும். பிரிபடாத குடும்பமாக இருந்தால்தான் இப்படி.

41. **கேள்வி:** (முருகன் — பழனி) ஒருவர் சொந்தப் பூமியில் கிணறு வெட்டி அதில் மூன்று வருடமாக ஊற்றுப் பலமாக இருக்கும்போது, அடுத்த பூமிக்காரர் அக்கிணற்றின் ஓரமாகத் தம் பூமியில் ஒரு கிணறு வெட்டலாமா? அப்படி அவர் வெட்டினால், முதல் கிணறு வெட்டியவருக்கு நஷ்டம் ஏற்படும். புதிய கிணற்றை எத்தனை அடி தூரத்திற்கு அப்பால் வெட்ட வேண்டும் என்று சட்டம் இருக்கிறதா?

பதில்: அடுத்த பூமிக்காரர் தம்முடைய பூமியில் எங்கே வேண்டுமானாலும், கிணறு வெட்டிக்கொள்ள உரிமை உள்ளவர். வேறு ஒருவருடைய கிணற்றிலிருந்து இத்தனை அடி தூரத்திற்கு அப்பால்தான் அவர் கிணறு வெட்ட வேண்டுமென்ற சட்டம் ஒன்றும் கிடையாது. புதிய கிணற்றால், முதல் கிணற்றின் சொந்தக்காரருக்கு நஷ்டமுண்டானாலும் அவர் ஒன்றும் செய்துகொள்ள முடியாது. ஏனென்றால் அவரவருடைய சொத்தை அவரவர் இஷ்டப்படி அனுபவிக்க ஓர் சட்ட பூர்வமான உரிமை இருக்கிறதென்று பொதுவாகச் சொல்லலாம். (54 மதராஸ் 793=61 மதராஸ் லா ஜர்னல் 563 என்ற வழக்கின் தீர்ப்பைப் பார்க்கவும்.)

42. **கேள்வி:** (வீரையன் — வலங்கைமான்.) ஒரு இந்து குடும்பத்தில் தகப்பனும், இரண்டு மகன்களும், ஐந்து மைனர் பேரன்களும் இருக்கும்போது, அவர்கள் பாகம் செய்துகொண்டால், மகன்களுக்கு மட்டில் பாகம் ஏற்படுமா? அல்லது பேரன்களுக்குள்ளும் பாகப் பிரிவினை ஏற்படுமா?

பதில்: இரண்டு விதமாகவும் பாகம் செய்து கொள்ளலாம். சாதாரணமாக, தகப்பனுக்கு ஒரு பாகமும், ஒவ்வொரு மகனுக்கும் ஒரு பாகமும் வைத்துக் கொண்டால், ஒவ்வொரு மகனுக்கும் வைக்கப்பட்டிருக்கும் பாகமானது அவருக்கும் அவருடைய மகன்களுக்கும் சொந்தமான குடும்பப் பொதுவான சொத்துக்களாகும். பழைய பொதுக் குடும்பம் மறைந்தாலும், இப் புதுக் குடும்பம் தோன்றிவிடும். ஒரு இந்து பொதுக் குடும்பத்தை விட்டு பிரிந்துபோகும் போது, தம்முடைய மகன்களையும் தம்முடன் சேர்த்துக்கொண்டு பிரிந்துபோக அவருக்கு உரிமை உண்டு. ஆனால் ஒவ்வொருவருக்கும், அதாவது ஒவ்வொரு மகனுக்கும், ஒவ்வொரு பேரனுக்கும், தனித் தனிப் பாகம் வைத்தும், பொதுச் சொத்துக்களை பிரித்துக் கொள்ளலாம்.

43. **கேள்வி:** (உமாமகேசுவரன் — ஒரத்தநாடு.) வியாபாரம் செய்யக்கூடிய கடையில் முதலாளியினுடைய சகோதரன் மட்டும் இருக்கிறார். காரியஸ்தர் கிடையாது. ஞாயிற்றுக் கிழமை கடை திறந்து வியாபாரம் செய்யலாமா?

பதில்: வாரத்தில் ஒரு நாள் கடையைக் கட்டாயமாக மூடவேண்டும். கடை மூடும் தினம் ஞாயிற்றுக்கிழமையாக இருக்கவேண்டுமென்ற அவசியமில்லை. வேறு தினத்திலும் கடை மூடும்படி ஏற்படுத்திக் கொள்ளலாம்.

சென்னை கிராம பஞ்சாயத்துச் சட்டம் (1950)

[The Madras Village Panchayats Act—1950. 1950—ஆம் வருடத்திய 10-ஆவது சென்னைச் சட்டம். சென்னைச் சட்ட மன்றத்தால் நிறைவேற்றப் பட்டது. 15—7—1950 ஜனாதிபதி அவர்களின் அங்கீகாரம் பெற்றது. 1—8—1950 தேதியுள்ள சென்னை சர்க்கார் கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட்டது. 1—4—1951 முதல் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. பஞ்சாயத்துச் சட்டம், அது சம்பந்தமான விதிகள், சர்க்கார் அறிக்கைகள் முதலியவைகள் எல்லாவற்றையும் சேர்த்து 1952 பிப்ரவரி மாத "வக்கீல்" இதழ் முதல் தொடர்ச்சியாகவும் விவரமாகவும் விளக்கம் செய்யப்பட்டு வருகிறது.]

பஞ்சாயத்து மெம்பர்களைத் தேர்ந்தெடுப்பது எப்படி?

பஞ்சாயத்தின் அங்கத்தினர்கள் (மெம்பர்கள்) எல்லாம் அப்பஞ்சாயத்தின் வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப் படுவார்கள். பஞ்சாயத்துத் தேர்தல் பற்றித் தேவையான விதிகள் ஏற்படுத்தச் சர்க்காருக்கு அதிகாரம் இருக்கிறது. இவ்வதிகாரத்தை அனுசரித்து, சர்க்காரால் 'தேர்தல் விதிகள்' ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. (21-8-1951 சென்னை சர்க்கார் கெஜட்-பாகம் I. A. ரூல் சப்ளிமெண்ட்-154) இத்தேர்தல் விதிகளைப் பின்பு கவனிப்போம்.

செக்ஷன் 7

ஷெடியூல் வகுப்பினருக்கு மட்டில் 26-1-1960 வரையில் சில பிரத்தியேக ஸ்தானங்கள் ஒதுக்கப்படும்.

ஒவ்வொரு பஞ்சாயத்திலும் அங்கத்தினர் ஸ்தானங்களில் சில ஸ்தானங்கள் ஜாப்தாவில் கண்ட ஜாதியினருக்கு (Scheduled castes - ஷெடியூல் வகுப்பினர்) ஒதுக்கப்படும். இதற்காக விதிகள் ஏற்படுத்தச் சர்க்காருக்கு அதிகாரம் உண்டு. அவ்விதிகளை அனுசரித்து ஒவ்வொரு பஞ்சாயத்திலும் எவ்வளவு ஸ்தானங்கள் ஷெடியூல் வகுப்பினருக்கு ஒதுக்கப்பட வேண்டுமென்று இன்ஸ்பெக்டர் நிர்ணயம் செய்வார். அரசியல் அமைப்புச் சட்டம் அமுலுக்கு வந்த தேதியிலிருந்து அதாவது 26-1-1950லிருந்து 10 வருடங்கள்வரை தான் அதாவது 26-1-1960 வரையில். இப்படி ஷெடியூல் வகுப்பினருக்குச் சில ஸ்தானங்கள் ஒதுக்கப்படும். அத்தேதிக்குப்பின் ஒதுக்க வேண்டியதில்லை. இப்படி ஸ்தானங்கள் ஒதுக்கப்பட்டாலும், ஒதுக்கப்படாத பொது ஸ்தானங்களுக்கும் ஷெடியூல் வகுப்பினர் போட்டியிடலாம். 27-3-1951 தேதி பிரசுரமான சர்க்கார் அறிக்கை 2-இன்படி-ஒவ்வொரு பஞ்சாயத்திலும் தலைவர் தவிர, பாக்கி உள்ள மொத்த அங்கத்தினர்களின் எண்ணிக்கையில் 5ல் 1க்கு மேற்படாதபடி எண்ணிக்கையுள்ள ஸ்தானங்களை ஷெடியூல் வகுப்பினருக்கு இன்ஸ்பெக்டர் ஒதுக்கவேண்டும். ஆனால் எந்தப் பஞ்சாயத்திலாவது, கடைசியில் நடந்த ஜனகணிதைப்படி ஜனத்தொகையில் பாதிக்கு மேல், ஷெடியூல் வகுப்பினராக இருந்தால், அந்தப் பஞ்சாயத்துக்கு மட்டில் அவர்களுக்குப் பிரத்தியேக ஸ்தானங்கள் ஒதுக்கப்பட வேண்டியதில்லை.

செக்ஷன் 8

தேர்தல் வார்டுகள்.

ஒவ்வொரு பஞ்சாயத்துக் கிராமமும் 'வார்டு' களாகப் பிரிக்கப்படும். இவ்விதம் பிரிக்கவும், ஒவ்வொரு 'வார்டு'க்கும் எத்தனை மெம்பர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்றும் இன்ஸ்பெக்டர் நிர்ணயம் செய்து அறிக்கை வெளியிடுவார். முதல் வகுப்புப் பஞ்சாயத்துக் கிராமங்களில் 5 வார்டுகளுக்குக் குறையாமல் இருக்கும். இரண்டாவது வகுப்புப் பஞ்சாயத்துக்களில் ஜனத்தொகை 1000க்குக் குறைவாக இருந்தால் இரண்டு வார்டுகளும், அதற்குமேல் இருந்தால் 5 வார்டுகளுக்கு மேற்படாமலுமிருக்கும்.

செக்ஷன் 9

பஞ்சாயத்து மெம்பர்களின் பதவிக் காலம்.

செக்ஷன் 10

சாதாரணத் தேர்தல்களில் தேர்ந்தெடுக்கப் படும் அங்கத்தினர்கள், எந்தத் தேதி முதல் அந்த ஸ்தானங்கள் காலியாகின்றனவோ அன்று பகல் 12 மணியிலிருந்து 3 வருஷங்களுக்குப் பதவி வகிப்பார்கள். இது பொதுவிதி. ஆனல் தகுந்த காரணங்கள் இருந்தால் எந்தப் பஞ்சாயத்தின் மெம்பர்கள் எல்லோருடைய பதவிக் காலத்தையும் சேர்ந்தாற் போல், மூன்று மாதங்கள் அதிகமாக நீடிக்கவும் அல்லது குறைக்கவும் இன்ஸ்பெக்டருக்கு அதிகாரம் உண்டு. ஒரு பஞ்சாயத்தின் மெம்பர்களின் சாதாரண பதவிக்காலம் முடிவதற்கு முன்பு உள்ள 3 மாதங்களுக்குள் தேர்தல் நடக்கும். தேர்தல் தேதியைத் தேர்தல் அதிகாரி (Election Authority) அதாவது இன்ஸ்பெக்டர் தான் நிர்ணயம் செய்வார். ஆனல் தகுந்த காரணங்கள் இருந்தால் மெம்பர்களின் பதவிக்காலம் முடிந்த பின்பும் தேர்தல் நடத்தும்படி உத்தரவிடச் சர்க்காருக்கு அதிகாரம் உண்டு.

ஒரு மெம்பருடைய பதவிக்காலம் முடிவதற்குள்ளேயே அவருடைய ஸ்தானம் காலியானல் (Casual Vacancy) அவ்விஷயத்தை அப்பஞ்சாயத்தின் நிர்வாக அதிகாரி, தேர்தல் அதிகாரிக்குத் (அதாவது இன்ஸ்பெக்டருக்குத்) தெரிவிக்க வேண்டும். இவ்விதம் நடுவே காலியாகும் ஸ்தானத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படும் அங்கத்தினர், யாருடைய ஸ்தானத்திற்குப் பதிலாக வருகிறாரோ, அவர் சாதாரணமாய்ப் பாக்கி எவ்வளவு காலம் பதவியிலிருந்திருப்பாரோ, அது வரையில் தான் அவருடைய ஸ்தானத்திற்குப் புதிதாகத் தேர்ந்தெடுக்கப் பட்டவரும் பதவி வகிக்கமுடியும்.

ஆனல் பொதுவாக எல்லா மெம்பர்களுடைய பதவிக்காலமும் இன்னும் மூன்று மாதங்களுக்குள் முடிவதாக இருந்தால் நடுவே காலியாகும் ஸ்தானங்களுக்குப் பிரத்தியேகத் தேர்தல் நடக்காது. ஆனல் இதற்கும் ஒரு பிரத்யேகத் தேர்தல் நடத்தவும் இன்ஸ்பெக்டர் உத்தரவிடலாம்.

அதைப் போலவே ஒரு பஞ்சாயத்தின் மொத்த மெம்பர்களின் எண்ணிக்கை நடுவே அதிகரிக்கப்பட்டு, அதிகமான ஸ்தானங்களுக்கும் தேர்தல் நடத்தப்பட்டால், அதில் வரும் புதிய மெம்பர்களும், மற்ற மெம்பர்கள் சாதாரணமாய் எவ்வளவு காலம் பதவியிலிருப்பார்களோ, அவ்வளவு காலம் தான் பதவி வகிப்பார்கள்.

தேர்தலில் ஒருவரும் தேர்ந்தெடுக்கப் படாவிட்டால்.

செக்ஷன் 11

ஒரு சாதாரணத் தேர்தலிலோ, தாற்காலிகத் தேர்தலிலோ எவரும் தேர்ந்தெடுக்கப்படாவிட்டால், வேறு ஒரு தினத்தில் மறு முறை தேர்தல் நடக்கும்படி இன்ஸ்பெக்டர் உத்தரவிடுவார். அதிலும் எவரும் தேர்ந்தெடுக்கப் படாவிட்டால், அப்பொழுது இருக்கும் பஞ்சாயத்து மெம்பர்களே புதிய பஞ்சாயத்து மெம்பர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இப்படித் தேர்ந்தெடுக்கப்படும் மெம்பர்களும், சாதாரண மெம்பர்களின் ஸ்தானத்திற்குத் தேர்ந்தெடுக்கப் படுபவர்கள் சாதாரண மெம்பர்களுக்கான காலத்திற்கும்; தாற்காலிகமாகக் காலியான ஸ்தானத்திற்கு தேர்ந்தெடுக்கப் படுபவர்கள் யாருடைய ஸ்தானத்திற்கு வருகிறார்களோ அவர்களுக்கான பாக்கி காலத்திற்கும் தான் பதவியிலிருப்பார்கள். இவ்விதம் பஞ்சாயத்தார்கள் தேர்ந்தெடுக்க வேண்டிய தேர்தலானது உபதலைவரை அவர்கள் தேர்ந்தெடுப்பதற்கு எவ்விதம் செய்வார்களோ அதே முறைப்படி தேர்தல் நடத்த வேண்டுமென்று 27-3-1951-ல் அறிக்கை 3 இன் படி சர்க்காரால் ஒரு விதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. உபதலைவரைத் தேர்ந்தெடுக்கும் முறை வேறு இடத்தில் விளக்கப்படும்.

பஞ்சாயத்து மெம்பர்களைத் தேர்ந்தெடுப்பது யார்?

செக்ஷன் 12

ஒவ்வொரு பஞ்சாயத்தின் அங்கத்தினர்களையும் (மெம்பர்களையும்) தலைவர்களையும் அப்பஞ்சாயத்தின் வாக்காளர்களே தான் (Voters) தேர்ந்தெடுக்க வேண்டும். ஒவ்வொருப் பஞ்சாயத்திற்கும் ஒரு வாக்காளர் ஜாப்தா தயார் செய்யப்படும். இந்த வாக்காளர் ஜாப்தா என்பது தனியாகத் தயார் செய்யப்படமாட்டாது. சென்னைச் சட்ட சபைத் தொகுதிகளுக்கு (Madras Legislative Assembly) அரசியல் அமைப்புச்சட்டப்படிக்கும் ஜனப் பிரதிநிதிச் சட்டப்படிக்கும் தயார் செய்யப்படும் வாக்காளர் ஜாப்தாவில், அந்தப் பஞ்சாயத்துக் கிராமம் சம்பந்தமான பாகமே தான் அப்பஞ்சாயத்தின் வாக்காளர் ஜாப்தாவாகும். சென்னைச் சட்டசபைத் தொகுதியின் வாக்காளர் ஜாப்தா பிரசுரம் செய்யப் பட்டவுடன் அதிலிருந்து ஒவ்வொரு கிராமப் பஞ்சாயத்து சம்பந்தமான பாகமும் தனித்தனியாக பிரித்து

சர்க்காரால் இதற்காக நியமிக்கும் அதிகாரியால் பிரசுரம் செய்யப் படும். பஞ்சாயத்தின் வாக்காளர் ஜாப்தாவானது பஞ்சாயத்தின் வார்டுகள் ஒவ்வொன்றுக்கும் தனித் தனியான பாகமாகப் பிரிக்கப்படும். வார்டுகள் புதிதாக ஏற்பட்டாலும், மாற்றப் பட்டாலும், அதற்கேற்ற படி வாக்காளர் ஜாப்தாவும் திருத்தப்படும். ஒரு பஞ்சாயத்தின் வாக்காளர் ஜாப்தா பிரசுரம் செய்யப் பட்ட பின்பும், சென்னைச் சட்டசபைத் தொகுதி ஜாப்தாவில் மாறுதல் அல்லது திருத்தங்கள் ஏற்பட்டிருந்தால், பஞ்சாயத்து வாக்காளர் ஜாப்தாவையும் அதற்குகந்தபடி திருத்திக் கொள்ளப்படும்.

ஒரே பஞ்சாயத்தின் வாக்காளர் ஜாப்தாவில் ஒருவருடைய பெயர் ஒரு இடத்தில் தான் இருக்க வேண்டும். வாக்காளர் ஜாப்தாவில் யார் பெயர் இருக்கிறதோ அவர்கள் தான் பஞ்சாயத்துத் தேர்தலில் 'வோட்' என்ற வாக்குச் சீட்டைக் கொடுக்கலாம். வாக்காளர் ஜாப்தாவில் பெயர் இல்லாதவர்கள் "வோட்" செய்ய முடியாது. மேலும் வாக்காளர் ஜாப்தாவில் ஒருவருடைய பெயர் இருந்தும், அவர் சித்த சுவாதீன மில்லாமலிருந்தாலும், ஊமை—செவிடாக இருந்தாலும், குஷ்டரோகியாக இருந்தாலும் அவர் "வோட்" செய்ய முடியாது.

[சென்னைச் சட்ட சபைத் தொகுதிகளுக்குத் தயார் செய்யும் வாக்காளர் ஜாப்தாவில் சிற்சில நிபந்தனைகளுக்கும் விதி விலக்குகளுக்கும் உட்பட்டு 21 வயது பூர்த்தியான எல்லோருடைய பெயர்களும் இருக்கும்.]

பஞ்சாயத்து 'மெம்பராக' வர யோக்கியதாம்சங்கள்.

செக்ஷன் 13

அந்தப் பஞ்சாயத்தின் வாக்காளர் ஜாப்தாவில் பெயர் இருக்கிறவர்கள் தான் பஞ்சாயத்து மெம்பராக, அதாவது அங்கத்தினராக, இருக்க முடியும். வாக்காளர் ஜாப்தாவில் பெயர் இல்லாதவர்கள் தேர்தலில் அபேட்சகராக இருக்க முடியாது.

செக்ஷன் 14

மேலும் வாக்காளர் ஜாப்தாவில் பெயர் இருந்தாலும், கீழே கண்டவர்கள் எந்தப் பஞ்சாயத்திலும் மெம்பராகப் போட்டியிடவும், இருக்கவும் முடியாது. அவர்களாவார்:—
(1) கிராமப் பெரிய தனக்காரர் (Village Headman) (2) கர்ணம் (3) கிராமச் சேவகர் (Village Servant) (4) ராஜ்ய சர்க்கார் ஊழியர்கள் (5) மத்திய சர்க்கார் ஊழியர்கள் (6) பஞ்சாயத்து ஊழியர்கள் (7) ஜில்லா போர்டுகளின் ஊழியர்கள் (8) முனிசிபாலிட்டிகளின் ஊழியர்கள் (9) சென்னை கார்ப்பரேஷன் ஊழியர்கள். இவர்கள் எந்தக் கிராம பஞ்சாயத்திற்கும் அங்கத்தினர்களாக வரவும் முடியாது; பஞ்சாயத்து அங்கத்தினர்களாக வந்த பிறகு மேற்கண்ட உத்தியோகங்களை ஏற்றுக் கொண்டவர்களும் பஞ்சாயத்து மெம்பர் பதவியை இழப்பார்கள்.

இந்த விதியின்படி ஒருவர் ஒரு பஞ்சாயத்தின் மெம்பராக இருப்பதற்குத் தடைப்பட்டிருக்கிறாரா அல்லவா என்ற சந்தேகம், தேர்தலுக்கு முன் ஏற்பட்டாலும் சரி, தேர்தலுக்குப்பின் ஏற்பட்டாலும் சரி அவ்விஷயத்தைச் சர்க்காருக்குத் தெரிவித்து, சர்க்கார் செய்யும் தீர்ப்பே முடிவானது.

தேர்தல் குற்றம் செய்தவர்கள் வோட் போடவும் முடியாது; மெம்பராக வரவும் முடியாது.

செக்ஷன் 15

இந்தியன் பீனல் கோடு (Indian Penal Code) என்ற குற்றங்களைக் குறித்த சட்டத்தின் 9A. அத்தியாயப்படி தேர்தல் சம்பந்தமான லஞ்சம், ஆள் மாறாட்டம், போன்ற குற்றங்களுக்காகக் கிரிமினல் கோர்ட்டில் தண்டனை அடைந்தவர்கள், தேர்தல் ரகசியத்தைப் பற்றிய விதிகளை மீறியதாகக் குற்றம் சாட்டப்பட்டுத் தண்டனை அடைந்தவர்களும், எந்தப் பஞ்சாயத்துத் தேர்தல்களிலும் "வோட்" கொடுக்க முடியாது; இவர்கள் பஞ்சாயத்து மெம்பர்களாக வரவும், இருக்கவும் முடியாது. ஆனால் இவ்விதத் தடை, தண்டனைத் தேதியிலிருந்து 5 வருடங்கள் வரைதான். தண்டனை விதிக்கும் கோர்ட்டும், இத்தண்டனையின் கால அளவைக் குறைக்க அதிகாரமுண்டு.

கீழே கண்டவர்கள் பஞ்சாயத்து மெம்பர்களாக வரவும் முடியாது. மெம்பர்களாக இருப்பவர்கள் பதவியையும் இழப்பார்கள்.

செக்ஷன் 16, 17

(1) கிரிமினல் கோர்ட்டில் தீவாந்தர தண்டனை அல்லது 6 மாதத்திற்கு மேல் சிறைத் தண்டனை அடைந்தவர்கள். ஆனால் இவர்கள் செய்த குற்றம் ஒரு இழிவான மனோ நிலை சம்பந்தமில்லாததாக இருந்தால் இத்தடை இல்லை. மேலும் அத்தண்டனை மேல் கோர்ட்டில் மாற்றப்படாமலும் மன்னிப்புக் கொடுக்கப்

படாமலும் இருந்தால்தான் இத்தடை. மேலும் இவ்விதத் தண்டனை அடைந்தவர்களுக்குத் தண்டனைத் தேதி முதல் 5 வருஷங்களுக்குத் தான் தடை. இவ்விதத் தண்டனைகளும் ஒரு யோக்கியக் குறைவாகப் பாவிக்கப்படக் கூடாதென்று உத்தரவிடச் சர்க்காருக்கு அதிகாரமுண்டு.

(2) புத்தி சுவாதீனமற்றவர்கள், செவிட்டு ஊமைகள், குஷ்டரோகிகள்.

(3) கடன் கொடுக்கச் சக்தியற்றவர் என்று தாமே இன்சால்வெண்டு மனுக்கொடுப்பவர்கள்; அல்லது வேறு ஒருவர் மனுவின் பேரில் இன்ஸால்வெண்டாகக் கோர்ட்டால் நிர்ணயம் செய்யப்பட்டவர்கள்.

(4) பஞ்சாயத்துடன் நடைமுறையிலிருக்கும் எவ்வித ஒப்பந்தம் செய்து கொண்டவர்கள்; அல்லது பஞ்சாயத்துக்காக எவ்வித வேலைகளையும் செய்பவர்கள். ஆனால் இவ்வித ஒப்பந்தம் அல்லது வேலையை ஏற்றுக்கொண்ட ஒரு கம்பெனிகளில் டைரக்டர் அல்லாமல் வெறும் பங்குதாரராக மட்டில் இருந்தால் இத்தடை இல்லை; மேலும் சர்க்கார் ஏற்படுத்தும் விதிகள் மூலம் சில ஒப்பந்தங்கள் அல்லது வேலைகளுக்கு இத்தடை இல்லை என்று உத்தரவிடலாம்.

[இந்த அதிகாரத்தை உபயோகித்து 27-3-'51 தேதியுள்ள அறிக்கை 5-இன் மூலம் சர்க்கார் சிற்சில ஒப்பந்தங்கள் சம்பந்தமாய் இத்தடை இல்லை என்று உத்தரவிட்டிருக்கின்றனர். அதாவது பஞ்சாயத்துடன் ஸ்தாவர சொத்து சம்பந்தமாய் குத்தகை, கிரயம், பெற்றவர்கள்; அதற்காக ஒப்பந்தம் செய்து கொண்டவர்கள்; கடன்கள் சம்பந்தமாகவோ, கடன்களுக்காக ஜாமீன் சம்பந்தமாகவோ ஒப்பந்தம் செய்து கொண்டவர்கள்; பஞ்சாயத்தின் விளம்பரங்கள் பிரசுரம் செய்யப்படும் பத்திரிகையில் பாத்தியமுள்ளவர்கள்; ஒரு வருடத்தில் ரூ. 1500-க்கு மேற்படாமல் பஞ்சாயத்துக்குச் சாமான்களை விற்பனை செய்யும் வியாபாரிகள்; அத்தொகை வரை பஞ்சாயத்தின் சரக்குகளை வாங்கும் வியாபாரிகள். இவர்கள் பஞ்சாயத்துத் தேர்தலுக்கு நின்று மெம்பர்களாகவும் வரலாம். மெம்பர்களாக இருப்பவர்களும் பதவியை இழக்கமாட்டார்கள்.]

(5) பஞ்சாயத்தின் வக்கீல்கள்; பஞ்சாயத்துக்கு எதிராக வகாலத்து வாங்கிய வக்கீல்கள்.

(6) அந்தப் பஞ்சாயத்துக் கிராமத்தில் அதிகாரமுள்ள கௌரவ மாஜிஸ்ட்ரேட்டுகள். மேலே கண்டவர்கள் இதில் கண்ட நிபந்தனைகளுக்கும் விதி விலக்குகளுக்கும் உட்பட்டு, எந்தப் பஞ்சாயத்தின் மெம்பர்களாக வரவும் முடியாது; மெம்பர்களாக வந்தவர்களுக்கு மேலே கண்ட யோககியதைக் குறைவுகள் ஏற்பட்டாலும், அவர்கள் வகிக்கும் பஞ்சாயத்து மெம்பர் பதவியை இழப்பார்கள்.

(7) மேலும் ஏற்கனவே ஒருவர் அப்பஞ்சாயத்தின் அங்கத்தினராக இருந்து, புதிய பதவிக் காலம் ஆரமபித்த பிறகும் பழைய பதவியின் கெடு முடியாமலிருக்குமானல், அவர் புதிய தேர்தலுக்கு நிற்கமுடியாது. அதைப் போலவே ஒரு பஞ்சாயத்தின் அங்கத்தினராக தேர்ந்தெடுக்கப்பட்டவரின் பதவி ஆரம்பிக்காமலே இருக்கும் போது அவர் மறுபடியும் வேறு ஒரு ஸ்தானத்திற்கு நிற்கக்கூடாது.

(8) ஒரு பஞ்சாயத்து மெம்பராக இருப்பவருடைய ஊழியர் அல்லது எஜமானர், அல்லது அதிகார தோரணையில் அவருக்குக் கீழ் அதிகாரியாகவோ மேல் அதிகாரியாகவோ இருப்பவர்கள் பஞ்சாயத்தின் மெம்பராக வரமுடியாது.

ஏற்கனவே மெம்பராக இருப்பவர் ஒருவர், வேறு பஞ்சாயத்து மெம்பரிடம் வேலை ஒப்புக் கொண்டாலும், அவருக்குக் கீழ் உத்தியோகஸ்தராக ஆனாலும், அவர் தம் பஞ்சாயத்து மெம்பர் பதவியை இழப்பார்.

(9) மேலும் பஞ்சாயத்து மெம்பர்களாக இருப்பவர் இச்சட்டப்படி ஒரு அதிகாரியாகவோ, சிப்பந்தியாகவோ ஆனால், அவர் தம் பஞ்சாயத்து மெம்பர் பதவியை இழப்பார்.

(10) ஒரு பஞ்சாயத்துக்கு, முந்திய வருடத்தில் வரி கொடுக்க வேண்டியவர்கள், அதற்கான நோட்டீசு கொடுக்கப்பட்டும், அதில் கண்ட கெடுவுக்குள் அவ்வரியைக் கொடுக்காமல் பாக்கி வைத்துக் கொண்டிருந்தால் அவர்கள் பஞ்சாயத்து மெம்பராக வரமுடியாது.

மெம்பராக இருப்பவர்களும் அப்பஞ்சாயத்துக்குக் கொடுக்கவேண்டிய வரி முதலிய எவ்விதக் கட்டணங்களையும் அதற்கான நோட்டீஸ் கிடைத்த 3 மாதங்கள் வரை கொடுக்காமல் பாக்கி வைத்துக் கொண்டிருந்தால் அவ்விதப் பாக்கியுள்ள மெம்பர்கள் தங்கள் மெம்பர் பதவிகளை இழப்பார்கள்.

(11) மெம்பராய் இருப்பவர்கள் கிராமத்தில் வசிப்பதை விட்டு விட்டால், மெம்பர் பதவியையும் இழப்பார்கள்.

(12) பஞ்சாயத்து மீட்டிங்குகளுக்குத் தொடர்ந்த மூன்று மாதங்களும் ஆஜராகாத மெம்பர்கள் பதவியை இழப்பார்கள். அம்மூன்று மாதங்

களுக்குள் மூன்று மீட்டிங்குகளுக்கும் குறைவாகவே இருந்திருந்தால், மூன்று மீட்டிங்குகளுக்கும் ஆஜராகாதவர்களும் மெம்பர் பதவியை இழப்பார்கள். ஆனால் ஒரு மீட்டிங்கைப்பற்றி அம்மெம்பருக்கு நோட்டீஸ் வராவிட்டாலும்; சட்டப்படிக்கான நோட்டீஸ் கெடுவுக்குக் குறைவாகவே அவகாசம் கொடுத்துக் கூட்டப்படும் மீட்டிங்குகளையும்; மெம்பர்கள் கேட்டுக் கொண்டதின்பேரில் கூட்டப்படும் மீட்டிங்குகளும் மேலே கண்ட கணக்கில் சேரா.

(13) மேலும் ஒரு பஞ்சாயத்துக் கோர்ட்டின் மெம்பரைப் பதவியை விட்டு நீக்க இன்ஸ்பெக்டருக்கு அதிகாரமுண்டு. இந்த அதிகாரத்தை உபயோகித்து பஞ்சாயத்துக் கோர்ட்டின் மெம்பர் பதவியை விட்டு ஒருவர் நீக்கப்பட்டால், அவர் அப்பஞ்சாயத்து மெம்பர் பதவியையே இழப்பார்.

செக்ஷன் 18

கிரிமினல் கோர்ட் தண்டனை காரணமாக ஒரு பஞ்சாயத்து மெம்பர் தம் பதவியை மேலே கண்டபடி இழந்து விட்டாலும் அத்தண்டனை அப்பீல் அல்லது ரிவிஷனில் ரத்துச் செய்யப் பட்டாலும்; அல்லது அத்தண்டனையால் ஏற்பட்ட தடையைச் சர்க்கார் உத்தரவால் நிவர்த்தி செய்தாலும், அவர் மறுபடியும் தம் பதவிக்கு வந்து, அவருடைய பதவிக் காலத்தின் கெடு எவ்வளவு பாக்கி இருக்கிறதோ அது வரையில் அவர் மெம்பராக இருப்பார். அவருடைய ஸ்தானத்திற்கு வேறு ஒருவர் இடைக் காலத்திற்காகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருந்தாலும் பழைய மெம்பர் திரும்பி வந்ததும் புதிதாக வந்தவர் தம் பதவியை இழப்பார்.

மேலும் மீட்டிங்குகளுக்கு வராத காரணத்தினால் ஒரு மெம்பர் தம் பதவியை இழந்தால் இவ்விஷயத்தை அவருக்கும் பஞ்சாயத்துக்கும் அறிவிக்க வேண்டியது நிர்வாக அதிகாரியின் கடமையாகும். அப்பஞ்சாயத்து மறுபடியும் கூடுவதற்கு முன்போ, நிர்வாக அதிகாரியிடமிருந்து தமக்கு அறிவிப்புக் கிடைத்த 15 நாட்களுக்குள்ளோ, பதவியை இழந்த மெம்பர் மறுபடியும் தம்மைப் பதவியில் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று அப்பஞ்சாயத்துக்கு விண்ணப்பம் செய்து கொண்டால் அவருடைய பதவியை அவருக்கே திருப்பிக் கொடுக்கப் பஞ்சாயத்துக்கு அதிகாரமுண்டு. ஆனால் இந்தச் சலுகை இரண்டு தடவைகள் தான் ஒருவருக்குக் காண்பிக்கப்படும்.

மெம்பராக இருக்க யோக்கியதாம்சங்களைப் பற்றிய தகராறுகளை யார் விசாரித்து முடிவு செய்வது?

செக்ஷன் 19

எந்த எந்த யோக்கியதாம்சக் குறைவுகள் (Disqualification) ஏற்பட்டால் ஒருவர் பஞ்சாயத்து மெம்பராக வர முடியாதென்றும்; ஏற்கனவே பஞ்சாயத்து மெம்பர்களாக இருப்பவர்களுக்கு எந்த எந்த யோக்யதாம்சக் குறைவுகள் ஏற்பட்டால், அவர்கள் மெம்பர் பதவியை இழப்பார்கள் என்றும் மேலே விவரிக்கப்பட்ட செக்ஷன் 13, 15, 16, 17 இவைகளில் விளக்கப் பட்டிருக்கிறது.

தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு மெம்பருக்கு, மேற்கண்ட யோக்கியதாம்சக் குறைவு இருக்கிறதென்றோ, அல்லது புதிதாக ஏற்பட்டு விட்டதென்றோ சொல்வதை அந்த மெம்பர் ஒப்புக் கொள்ளாவிட்டாலும் சரி, அல்லது அந்த மெம்பருக்கே அது சம்பந்தமாகச் சந்தேகம் இருந்தாலும் சரி, இதைப்பற்றி கோர்ட்டுக்கு மனுப்போடவேண்டும். பஞ்சாயத்தின் ஆபீஸ் எங்கே இருக்கிறதோ அந்த இடத்திற்கு அதிகாரமுள்ள டிஸ்டிரிக்ட் முன்சீப்புக்கு மனுப்போடவேண்டும். ஒரு டிஸ்டிரிக்ட் முன்சீப்புக்கு அதிகமாக அங்கே இருந்தால், பிரதான டிஸ்டிரிக்ட் முன்சீப்புக்கு, மனுப்போடவேண்டும். தமக்கே சந்தேகம் உள்ள அந்தப் பஞ்சாயத்து மெம்பரே மனுப்போடலாம். அல்லது அப்பஞ்சாயத்தின் வேறு மெம்பரும் மனுப்போடலாம். அல்லது பஞ்சாயத்தின் தீர்மானப் படிக்கோ, இன்ஸ்பெக்டரின் உத்தரவுப் படிக்கோ, அப்பஞ்சாயத்தின் நிர்வாக அதிகாரியும் மனுப்போடலாம். ஒரு முன்சீப்பிடம் கொடுக்கப்பட்ட மனுவை அதே ஜில்லாவிலுள்ள வேறு முன்சீப்புக்கு மாற்ற ஜில்லா ஜட்ஜுக்கு அதிகாரம் உண்டு. இவ்வித மனு முடியும் வரையில் சம்பந்தப்பட்ட மெம்பர், தம் மெம்பர் பதவியை வகித்துவர உரிமை உண்டு.

தலைவரும் உபதலைவரும்

செக்ஷன் 20

ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் ஒரு தலைவரும் (President) ஒரு உபதலைவரும் (Vice President) உண்டு.

தலைவரை எப்படித் தேர்ந்தெடுப்பது.

பஞ்சாயத்தின் தலைவர் அப்பஞ்சாயத்தின் வாக்காளர் ஜாப்தாவில் பெயர் உள்ளவராக

187716
சென்னை-600 028

செக்ஷன் 21 இருக்கவேண்டும். அப்பஞ்சாயத்தின் வாக்காளர்கள் எல்லோரும் சேர்ந்து நேரடியாகப் பஞ்சாயத்து தலைவரைத் தேர்ந்தெடுக்கவேண்டும். இதற்காகத் தேர்தல் நடத்தப்படும். அத்தேர்தலில் எவரும் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படாவிட்டால் இதற்காக மறு தேர்தல் நடக்கும். பஞ்சாயத்து மெம்பர்கள் தலைவராக வர, தேர்தலில் அபேட்சகராக இருக்க முடியாது. பஞ்சாயத்துத் தலைவர் ஸ்தானத்திர்கு அபேட்சகராக நிற்பவர் மெம்பர் ஸ்தானத்திற்கும் அபேட்சகராக நிற்க முடியாது. பஞ்சாயத்து மெம்பர்களைத் தேர்ந்தெடுப்பதற்காகத் தேர்தல் நடக்கும் தினத்தன்றே தலைவரைத் தேர்ந்தெடுபபதற்கான தேர்தலும் நடத்தப்படவாம்.

தலைவர் பதவிக்காலம்:—தலைவர் மூன்று வருடங்கள் பதவி வகிப்பார். இது சாதாரண தேர்தலில் தேர்ந்தெடுக்கும் தலைவருக்கு. ஆனால் ஒரு தலைவர் ஸ்தானம் அதற்கு மததியில் காலியாகி அதற்காக மறுபடியும் தேர்ந்தெடுக்கப்படும் தலைவர் அந்த மூன்று வருடக் கெடுவில் பாக்கி இருக்கும் காலத்திற்குத்தான் தலைவராக இருக்கமுடியும். இந்த ஷரத்தானது இச் சட்டத்தில் பதவி காலத்தைக் குறித்த மற்ற ஷரத்துக்களுக்கும் விதிகளுக்கும் உட்பட்டது. சாதாரண தேர்தல் நடப்பதற்கு இன்னும் மூன்று மாதங்களுக்குள்தான் இருந்தால் அதற்குள் தலைவர் ஸ்தானம் காலியானாலும் இதற்காகத் தாற்காலிகத் தலைவர் தேர்தல் நடத்தப்படமாட்டாது.

தலைவரின் யோக்கியதாம்சக் குறைவுகள்: எந்த எந்தச் சந்தர்ப்பங்களில் ஒருவர் பஞ்சாயத்து மெம்பராக வரமுடியாதென்றும்; எந்த எந்தச் சந்தர்ப்பங்களில் ஏற்கனவே மெம்பராக வந்தவர்களும் பதவி இழப்பார்களென்றும் இதில் சந்தேகம் ஏற்பட்டால் மனுச் செய்து கொள்வது பற்றியும் செக்ஷன் 14 முதல் 19 வரை உள்ள ஷரத்துக்கள் எல்லாம் மேலே விவரிக்கப்பட்டபடி பஞ்சாயத்துத் தலைவருக்கும் உண்டு.

பஞ்சாயத்துத் தலைவரும் ஒரு மெம்பர் தான்: பஞ்சாயத்துத் தலைவரும் அப்பதவி காரணமாகப் பஞ்சாயத்தின் மெம்பராவார். பஞ்சாயத்தின் தீர்மானங்களில் தலைவருக்கும் வோட் உரிமை உண்டு.

உபதலைவர்

உபதலைவர் பஞ்சாயத்து மெம்பராக இருக்க வேண்டும். பஞ்சாயத்து மெம்பர்கள் தான் உபதலைவரைத் தேர்ந்தெடுப்பார்கள். இதற்காக நடக்கும் தேர்தலில் எவரும் உபதலைவராகத் தேர்ந்தெடுக்கப்படாவிட்டால் மறுபடியும் ஒரு முறை இதற்காகத் தேர்தல் நடத்தப்படும். செக்ஷன் 22

தேர்தல் விதிகள்

ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும் (1) அங்கத்தினர்கள், அதாவது மெம்பர்கள் (2) தலைவர் (3) உபதலைவர் — இவர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். மெம்பர்களைத் தேர்ந்தெடுப்பவர்கள் வாக்காளர்கள். தலைவரையும் வாக்காளர்களே தான் தேர்ந் தெடுகக வேண்டும். பஞ்சாயத்து மெம்பர்கள் தங்களுக்குள் ஒருவரையே உபதலைவராக தேர்ந் தெடுத்துக் கொள்ள வேண்டும். ஆகையால் ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் மூன்று வகையான தேர்தல்கள் உண்டு. அடுத்த இதழில் "தேர்தல் விதிகள்" விவரமாய் விளக்கப்படும்.

தேர்தல்களை நடத்த வேண்டிய பொறுப்புள்ள அதிகாரி 'தேர்தல் அதிகாரி' (Election Authority) யார் 'தேர்தல் அதிகாரி' என்று நியமிக்கச் சர்க்காருக்கு அதிகார முண்டு. இந்த அதிகாரத்தை உபயோகித்து இன்ஸ்பெக்டரையே தேர்தல் அதிகாரியாகச் சர்க்கார் நியமித்திருக்கின்றனர்.

(5—6—1951 - சென்னைச் சர்க்கார் கெஜட்- பாகம் I A. ரூல் சப்ளிமெண்ட்—பக்கம் 109- பார்க்கவும்.)

(தொடரும்)

குறைந்த விலை! நிறைந்த சுகம்!!
எல்லா வாய்வுகளையும் கண்டிப்பது
மிஸ்க்காய லேகியம்
டிரேட் மார்க்கு ரிஜிஸ்டர் No. 222.
T. K. S. பவான்சங்கர் Co,
27, தாடாளங்கோவில்,
சீர்காழி.

பொதுமக்களால் போற்றப்பட்டுவரும்
குடந்தை
லேபர் & கோ.,
தனி சுவை வாய்ந்த சோடா கலர் பானங்களை அருந்துங்கள்.
நிர்வாகி,
குடந்தை லேபர் & கோ.,
கும்பகோணம்.

PRINTED BY N. RAMARATNAM, M.A., B.L., AT THE MADRAS LAW JOURNAL BRANCH PRESS, TIRUBUVANAM, TIRUVIDAIMARUDUR, AND PUBLISHED BY R. NARASIMHAN, B.A., B.L., AT NO. 73, DABIR WEST STREET, KUMBAKONAM, FOR SOUTHERN BOOK HOUSE LTD, Editor:—V. S. VIJAYARAGHAVACHARI, B.A., B.L.

ஸ்டார் புகையிலை கம்பெனி
மார்க்
ஸ்டார் புகையிலை
TRADE MARK
சிவபுரி
புதுக்கோட்டை

சுவைப்பதற்கு மனோரம்மியமானது

ஸ்டார் புகையிலை கம்பெனி,

உரிமையாளர்கள்:—

மீ.ந.அ.செய்யது இப்ராம்ஸா & சன்ஸ்

தபால்பெட்டி நீ. 20,

புதுக்கோட்டை.

நாகரீக நூதன பார்டர்களில்
கண்ணைக் கவரும்
மனோகரமான வேலைப்பாடுள்ள

பட்டு ஜவுளி தினுசுகள்

குறைந்த விலையில் கியாரண்டியுடன்
கிடைக்குமிடம்

ராணி ரெங்கய்யர் சன்ஸ்

கைத்தறி பட்டு ஜவுளி உற்பத்தியாளர்கள்
கெருடலாயத் தெரு,
கும்பகோணம்.

பிராஞ்சு:—
20, லக்ஷ்மிபுரம் 2-வது தெரு,
மதுரை

பெங்களூர்
காஞ்சீபுரம்
கும்பகோணம்

பட்டுச் சேலைகள்
நூதன பார்டரில்
ஏராளமாக ஸ்டாக் செய்திருக்கிறோம்.

ரெங்கமூர்த்தி கம்பெனி

கெருடலாயத் தெரு,
கும்பகோணம்.

பிராஞ்சுகள்:—
காரைக்குடி & நாட்டரசன்கோட்டை.

Regd. No. M. 5399 "THE VAKIL"

ஸ்தாபிதம் 1909, போன் நெ. 57 தந்தி விலாசம் "கோகுல்"

டி. எஸ். ஆர். & கோ.,

கும்பகோணம்

பிராஞ்சு: (மன்னார்குடி)

கூந்தலுக்கு வளர்ச்சியையும் மூளைக்கு குளிர்ச்சியையும்
கொடுப்பதில் நிகரற்ற

சந்தனாதித்தைலம், அரைக்கீரைவிதைத்தைலம்
கோகுல் கூந்தல் தைலம்

வாசனைப்பாக்கு, பல காய்கறி ஊறுகாய், ரோஜாப்பூ குல்கந்து, ஊதுவத்திகள்
பன்னீர் இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

SOLE AGENTS:

For Madras
SURAJ AGENCIES
MADRAS

For Coimbatore, Palghat & Nilgiris
B. BALAPATTABI CHETTIAR,
246, VYSYAL STREET, COIMBATORE.

PRINTED AT THE MADRAS LAW JOURNAL PRESS, TIRUVUVANAM, TDR.